சுகங்கள்: பதினான்கு
Registered as a Newspaper
உதயன்
விலை ரூபா 6.00
6 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 17 வியாழக்கிழமை (01-03-2001) UTHAYAN - A Lively National Tamil Daily சுதிர்:94

# விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய பிரிட்டிஷ் நாடாளுமன்றில் சிபாரிசு!

## 21 அமைப்புகளின் பெயர்ப் பட்டியலை உள்துறை அமைச்சர் சமர்ப்பித்தார்

லண்டன், மார்ச் 1

**பிரிட்டனில் பயங்கரவாத அமைப்புகள் எனத் தெரிவித்துத் தடை செய் ... வேண்டிய - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட - 21 ... ப்புகளின் பெயர்ப்பட்டியல் மற்றும் விவரங்களை அந்த நாட்டின் ...றை அமைச்சர் ஜக் ஸ்ட்ரோ நேற்றுப் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் ...ர்த்தார்.**

19ஆம் திகதி முதல் ... நடைமுறைக்கு வந்த ...ாதத்தைத் தடுப்பது தொடர் ...திய சட்ட மூலத்தின் கீழ்- ...ட செய்யப்படுவதற்கு உள் அமைச்சரால் சிபாரிசு செய் ...டிருக்கும் 21 அமைப்புகளில் ...ப்பாலானவை இஸ்லாமியத் தீவிர ... அமைப்புகளாகும்.

ஹிஸ்புல்லா, ஹமாஸ், அபு ..., குர்டிஷ் மக்கள் இயக்கம் ...வையும் பட்டியலில் அடங்

பட்டியலின் 12 ஆவது இடத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பாலசிங்கம் ஒஸ்லோவில்?

லண்டன்,மார்ச்1

பிரிட்டனில் தடைசெய்யப்படும் அமைப்புகளின் பட்டியல் நேற்று வெளியான சமயம் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் லண்டனில் இருக்கவில்லை என்றும்-

(14ஆம் பக்கம் பார்க்க)

தற்போது உள்துறை அமைச்சரினால் சிபாரிசு செய்யப்பட்ட அமைப்புகளின் பட்டியல் விடயம், பிரிட்டனின் நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் விவாதிக்கப்படவேண்டியுள்ளது என்பதும் -

இரு சபைகளினதும் அங்கீகாரத்தைப் பெறவேண்டியுள்ளது என்பதும் - குறிப்பிடத்தக்கதாகும்.

நேற்று முன்னிரவில் இந்தப் பட்டியல் தொடர்பான விவாதம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. (உ)

## தடை பாதிப்பை ஏற்படுத்தினாலும் சமாதான முயற்சி தொடரும் அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு

லண்டன்,மார்ச்1

"பிரித்தானிய அரசு எமது விடுதலை இயக்கம் மீது தடை விதித்த போதும் நாம் எமது சமாதான



முயற்சியை விடாது தொடருவோம். நோர்வே அரசுக்கு எம்மாலான ஒத்துழைப்புகள் அனைத்தையும் வழங்குவோம். பிரித்தானிய அரசு, எந்த வகையில் - மென்முறையிலா அல்லது கடும் போக்கிலா - இப் பயங்கரவாதச் சட்டத்தை நடைமுறைப்படுத்த இருக்கிறது என் பதில்தான் சமாதான முயற்சியின் எதிர்காலம் தங்கியிருக்கிறது."

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரிட்டனின் உள்துறை அமைச்சு நேற்று மாலை நாடாளுமன்றத்தில் வெளியிட்ட 'பயங்கரவாத அமைப்புகளின்' பெயர்ப்பட்டியலில் விடுதலைப் புலிகளை இணைத்திருப்பது குறித்து கருத்துத் தெரிவித்த பாலசிங்கம், "25 ஆண்டுகளுக்கு மேலாக ஈழத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காகப் போராடி வரும் உண்மையான மக்கள் இயக்கமான எமது விடுதலை அமைப்பிற்கு பிரித்தானிய அரசினால் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டிருப்பது எமக்கு வேதனையைத் தருகிறது" எனக் கூறினார்.

"இன்றைய நாள், ஒரு சோக நாள். ஆங்கிலேயர் - தமிழர் உறவில் நிகழ்ந்த துக்க நாள். விடுதலைப் புலிகளின் உத்தேச தடைக்கு எதிராக ஒன்று திரண்டு எழுந்து ஒருமித்த குரல் எழுப்பி வந்த தமிழீழ மக்கள் பிரித்தானிய அரசின் முடிவினால் ஆழ்ந்த கவலையும் ஏமாற்றமும் அடைவர்.

### சமாதான முயற்சிகளை பெரிதும் பாதிக்கும்

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை தமிழரின் நலன்களுக்கு பெரும் குந்தகமாக அமையும்; நோர்வே அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளையும் பெரிதாகப் பாதிக்கும். பிரித்தானிய அரசின் இந்த முடிவு சிங்கள இனவாத அரசின் விட்டுக்கொடாத கடும் போக்கை மேலும் தீவிரப்படுத்தும். இராணுவப் பாதையில் சென்று போரையும் வன்முறை

(14ஆம் பக்கம் பார்க்க)

## ...ந்திரிகா கொலை முயற்சியும் புலிகள் மீதான குற்றச்சாட்டில்!

லண்டன்,மார்ச்1

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா ...ங்கவை 1999 இறுதிப் பகுதி ...கொலை செய்வதற்கு விடு... புலிகள் முயற்சி எடுத்தார் ...ற விவகாரமும் பிரிட்டனில் ...ளைத் தடை செய்யும் முயற்... காரணமாகக் காட்டப்பட்...து.

அங்கு தடை செய்யப்படுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ள 21 அமைப்புகளையும், தடைசெய்வதற்கு சிபாரிசு செய்வதற்கான காரணங்களை நேற்று பிரிட்டன் நாடாளுமன்றில் உள்துறை அமைச்சர் சமர்ப்பித்தார்.

ஒவ்வொரு அமைப்புக் குறித்தும் சுருக்கமான விவர அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக் குறித்துக் கூறப்பட்ட காரணங்கள் வருமாறு:-

ஆயுதம் ஏந்தி தனிநாடு கோரிப் போராடும் விடுதலைப் புலிகளின் போராட்டத்தினால் இரு தரப்பிலும் மொத்தம் 60 ஆயிரம் பேர் வரை உயிரிழந்திருக்கின்றார்கள். இராணுவ நிலைகளையும், அரசியல் தலைவர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பெரும் ஏமாற்றம் என்கிறது தமிழ்க் காங்கிரஸ் கட்சி

கொழும்பு,மார்ச்1

பிரிட்டன் புலிகளைத் தடைசெய்ய முயன்றுள்ளமை பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளதாகத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் க.குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

1930 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தின் போதும் 1948 ஆண்டு சோல்பரி அரசியல் சீர்திருத்த ஆணைக்குழு முன்பாகவும் சம உரிமை கோரிப் போராடிய சேர் பொன். இராமநாதனுக்கும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ...பாகரனையும் புலிகளையும் அழிக்க ...த் தமிழரும் ஒத்துழைக்க வேண்டும்

### ...ழைப்பு விடுக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா

கொழும்பு,மார்ச்1

... மக்களின் தலைவர் ... ...றிக்கொள்ளும் வேபிர... ... நாட்டினதும் - குறிப்... ..., கிழக்குப் பகுதியின ...மிழ் மக்களினதும் அபிவி...தும் முன்னேற்றத்துக்கும் ...க இருக்கின்றார். எனவே அழிக்கப்படவேண்டியவர். ... புலிகளை அழித்தொழிப்...த் தமிழர்களும் ஒத்து...ழைக்கவேண்டும்."

... அழைப்பு விடுத்துள் ... சந்திரிகா குமார...

... தடுப்பு முகாமில் ...ம் படுகொலை செய் ...வர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்கும் நிகழ்வு நேற்று ஜனாதிபதிச் செயலகத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

(14ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குப் பல்கலையில் நேற்று மறியல் போர்!

மட்டக்களப்பு,மார்ச்1

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் அண்மையில் நடைபெற்ற 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வு விடுதலைப் புலிகளினாலேயே ஏற்பாடு செய்யப்பட்டது என மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரி தெரிவித்திருப்பதைக் கண்டித்தும்-

கடந்த சனியன்று மட்டு. நகரப் பகுதியில் வைத்து கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் நால்வர் படையினரால் நையப்புடைக்கப்பட்டதைக் கண்டித்தும்-

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நேற்று மறியல் போராட்டம் ஒன்று

(14ஆம் பக்கம் பார்க்க)

## தடையை ஓர் இழப்பாக புலிகள் கருதக்கூடாது சம்பந்தன் கோரிக்கை

கொழும்பு,மார்ச்1

பிரிட்டன் தமது அமைப்பைத் தடைசெய்ததை விடுதலைப் புலிகள் ஓர் இழப்பாகக் கருதக்கூடாது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் அரசின் தடை குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புலிகள் இயக்கம் மீதான இந்தத் தடை கவலை அளிக்கின்றது. ஆனால் அது நோர்வேயின் சமாதான முயற்சிகளைப் பாதிக்காது என்று நம்புகின்றோம்.

புலிகள் தொடர்ந்து சமாதான

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பாராட்டுகின்றோம்



தீவகக் கல்வி திணைக்களத்தில் சமூகக்கல்வி ஆலோசகராகக் கடமை புரியும்

## திரு.சு.திசநாயகம்பிள்ளை

அவர்கள் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதை மனதார வாழ்த்துகின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
வலயக் கல்வித் திணைக்களம்,
தீவகம்.

(84761)


# மத்தியஸ்தர் தாக்கப்பட்டார்

ஊர்காவற்றுறை,மார்ச்1

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறை பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் போது பிரதம மத்தியஸ்தராக கடமையாற்றியவர் உதைபந்தாட்ட வீரரினால் தாக்கப்பட்டார்.

மெலிஞ்சிமுனை விளையாட்டுக் கழகத்துக்கும் நாரந்தனை அண்ணா விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டிக்கு பிரதம மத்தியஸ்தராகக் கடமையாற்றியவரே தாக்குதலுக்கு இலக்கானார்.

அண்ணா விளையாட்டுக் கழக வீரரால் கம்பத்துக்குள் அடிக்கப்பட்ட பந்து உதைபந்தாட்ட விதிகளுக்கு முரணானதாகக் காணப்பட்டதால் அது கோல் அல்ல என மத்தியஸ்தரால் தீர்க்கப்பட்டது.

இதனை அடிப்படையாக வைத்தே, மேற்படி கழக வீரர் ஒருவர் உரிய நேரத்தில் ஆட்டம் முடிவடைந்த சமயம் திடீரென மத்தியஸ்தரைத் தாக்கியதாகக் கூறப்படு கின்றது.

இதனை அடுத்து குறித்த நபர் ஏனைய போட்டிகளில் பங்கு பற்றுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

(உ-16)

# இராமகிருஷ்ண ஜெயந்தி விழா

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு ஸ்ரீ இராமகிருஷ்ணரின் 166ஆவது ஜெயந்தி தின விழா வித்தியாலய அதிபர் இ.சிவபாதசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார் பேராசிரியர் செ.சிவஞான சுந்தரம் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு 'குருவும் சிஷ்யனும்' என்னும் பொருளில் உரை நிகழ்த்துவார்.

வித்தியாலயத்தில் புதிதாகக் கட்டப்பட்ட வகுப்பறை ஒன்றும் நாளைய தினம் திறந்து வைக்கப்படும்.(க-7)


# பாராட்டுகின்றோம்



## திரு. முத்தையா செல்லத்தம்பி

M.L.T., சமாதான நீதிவான்

நல்லூர் முருகப்பெருமான் பதியை அண்டி வாழ்ந்த அவரின் முன்னோரின் வழித்தோன்றலில் உதித்த சமூகத் தொண்டரான திரு. முத்தையா செல்லத்தம்பி அவர்கள் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி ஆர்.ரீ.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் 16.01.2001 இல் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் எடுத்துள்ளார். அவரின் சேவைகள் தகைமைகள் பற்றிய சில குறிப்புகள் வருமாறு:-

★ யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் ஆரம்பக் கல்வி பயின்று பின்பு இலங்கை வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் பயின்று M.L.T. ஆக சித்தியடைந்தார்.

★ இலங்கை வைத்திய சேவையில் இரண்டு வியன்னா வைத்திய நிபுணர்களுடனும், ஓர் உலக சுகாதார ஸ்தாபன(WHO) நிபுணருடனும், எமது சுகாதார சேவையில் இயக்குநர் நாயகமாக மிளிர்ந்த இரண்டு டாக்டர்களுடனும் மேலும் பலதரப்பட்ட பணியாளர்களுடனும் சேவை செய்தார். இச்சந்தர்ப்பத்தினால் அனுபவமும் திறமையும் கைவரப்பெற்றார்.

★ யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் பல வருடகாலம் சேவை செய்தார். மொத்தமாக வைத்திய சேவையில் 35 வருடங்கள் அரிய சேவை செய்துள்ளார்.

★ நல்லூர்த் தொகுதி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர், பல அபிவிருத்தி வேலைகளில் செயற்படுகிறார்.

★ 1997 தொடக்கம் 2000 ஆம் ஆண்டு (3 வருடங்கள்) நல்லூர்த் தொகுதி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர். இக்காலகட்டத்தில் வீடுகள், தளபாடம், உடைமைகள் உடைந்து ஓய்வூதியர்கள் மிகவும் நலிவுற்றுக் காணப்பட்டார்கள். இவரின் விடாமுயற்சியினாலும் 08.09.1998 இல் யாழ்.அரசாங்க அதிபருடன் கலந்துரையாடல் நடைபெற்றது. இதன் பயனாக நஷ்டஈடு வழங்கப்பட்டு வருகிறது.

★ நல்லூர் ஞான ஒளி மன்ற ஸ்தாபக உறுப்பினராவார். அத்துடன் தலைவராகவும், போஷகராகவும் சேவை செய்தார்.

★ சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாஜ உப தலைவர். கழக மாணவ, மாணவிகளின் ஆங்கில மொழிப் போட்டியை யாழ்.இந்திய கல்லூரியில் சிறப்பாக நடத்தியவருமாவார்.

★ யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் பகுதி நேர ஆங்கில ஆசிரியராக மூன்று வருடங்கள் சேவையாற்றியவர்.

★ யாழ்ப்பாணப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வரை.) நல்லூர் மத்தி கிளைக் குழு 12,12A செயலாளராக 1997 தொடக்கம் கடமையாற்றுகிறார். கூட்டுறவின் உயர்ந்த தத்துவங்களைப் பேணிப் பணி புரிபவர். அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட 'அரசாங்க சேவை ஓய்வு பெற்றோர் நம்பிக்கை நிதியம்' இதன் நல்லூர் பிரதேச சபை உப தலைவர்.

★ இவர் ஆற்றிய சேவைகள், அர்ப்பணிப்புக்கள் பல உள்ளன. இவரின் கடமை உணர்ச்சியினாலும், செயல் திறமையினாலும் இன்று சமாதான நீதிவானாகப் பதவி பெற்றுள்ளார். இவர் நலமுடன் பல்லாண்டுகள் சேவையாற்ற இறைவனை வேண்டுகிறோம்.

அரியாலை மலர்மகள் வீதி. ஞானவைரவர் கோயில் தர்மகர்த்தா சி. நாகேந்திரமும் குடும்பத்தவரும்.
நல்லூர் ஞான ஒளி மன்ற உறுப்பினர் மு. சுந்தரம்பிள்ளையும் குடும்பத்தவரும்.
யாழ். மாநகர சபை ஊழியர் ஆர். ராகவன்.
யாழ். ஞானஒளி மன்ற மாணவத் தலைவியும்.
யாழ். மாநகர சபை ஊழியருமான சாந்தி ராகவன்,
வைத்திய தாதி புஷ்பராணி ராஜேந்திரமும் குடும்பத்தவரும்.

(84754)



# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் க.பத்மநாதன்

திதி:01-03-2001

ஆண்டுகள் இரண்டு சென்றாலும் எங்கள் பாசதீபத்தின் நினைவலைகள் என்றும் அழியாது!

தகவல்:-
இ.கருணாகரன்(இ.மி.ச)
(மைத்துனர்)
அரியாலை.

உங்கள் பிரிவால்
கண்ணீர் சிந்தும்
மனைவி,தாய்,சகோதரர்கள்,
மைத்துனர்கள்.

(84758)



# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை

திருமதி பரமலட்சுமி பாலச்சந்திரன்

அவர்களின் அருமைத் தந்தையார்

## அமரர் க.ஆறுமுகம்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்குமாக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அலுவலக ஆளணியினர்,
யா/ யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

(84755)



# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தில் எழுதுநராகக் கடமையாற்றும்

திருமதி இலட்சுமி ஜெகதீசன்

அவர்களின் அன்புக் கணவரான

## இராமநாதன் ஜெகதீசன்

அவர்கள் 27-02-2001 இல் சிவபதமடைந்து விட்டார். அன்னாரின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல காரைநகர் ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வரப் பெருமானை வேண்டிக்கொள்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
காரைநகர் ப.நோ.கூ.சங்கம்,
காரைநகர்.

(C/15507)


## திருத்தம்

'உதயன்' 27.02.2001 ஆம் திகதிய இதழின் எட்டாம் பக்கத்தில் வெளியான -

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்ச்சிகள் குறித்த விளம்பரத்தில் -

சிறப்பு விருந்தினர்களில் ஒருவரான சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளரின் பெயருக்கு முன்னால் கலாநிதி என்ற பதம் தவறுதலாக அச்சாகிவிட்டது.

திரு.சு.தனபாலசிங்கம் என்று திருத்தி வாசிக்கவும்.


ராஜா யாழ்ப்பாணம்

கார்த்திக், திவ்யாஉன்னி மற்றும் பலர் நடிப்பில்

கண்ணன் வருவான்

காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே)

நாளை முதல்
டைட்டானிக் (தமிழ்-ரீல்ஸ்)

(C/15471)

லக்ஷ்மி இணுவில்

2 ஆவது வெற்றி வாரமாக
அஜித், சிம்ரன் நடித்த

உன்னைக்கொடு என்னைத் தருவேன்

(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00 2.30
(புதிய நேரம்)

நாகம்ஸ் சுன்னாகம்

விஜயகாந்த், தேவயானி, வாசு கபாலி நடித்த

வல்லரசு

(ரீல்ஸ்)

காட்சிகள்:11.00, 2.30 (புதிய நேரம்)

(C/15471)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திருவாளர் காசிநாதர் அழகரத்தினம்

(அதிபர், யா/மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம்)

அவர்கள் மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு.பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்

அவர்களது சமூகப் பணி மேலும் பல்லாண்டு காலம் தொடர பாணாவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகையின் திருப்பாத கமலங்களை வேண்டுகிறோம்.

யா/மாதகல் சென்.ஜோசவ் மகா வித்தியாலய,
யா/மாதகல் நுணசை வித்தியாலய
பாடசாலைச் சமூகம்.

(84757)



324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

MOBILE NET MCS COMPUTER SERVICES

# இணைய மொழி ஜாவா

நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்

பிரிவு I ஆரம்பம்: 04.03.2001 காலை 7.45 (Sun., Sat.)
பிரிவு II ஆரம்பம்: 05.03.2001 காலை 7.45 (Mon., Tue.,Fri.)

மலிவு விலையில் ஒரே CDயில் 150 பாடல்கள் (உங்கள் தெரிவின் மூலம்)
கணனி மென்பொருள்கள் (SOFT WARE CD's)

(C/15505)

# உதயன்

## அவற்றுக்கும் தேவை புனர்வாழ்வு

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தேசிய தரு பனை; சற்பகதருவும் அதுவே. அதற்கடுத்த இடத்தைப் பெறுவது தெங்கு—தென்னை. குறிப்பாகத் தென்மராட்சிப் பிரதேசத்தின் மண்வளம் தெங்குச் செய்கைக்குப் பெரிதும் உகந்தது.

குடாநாட்டின் பெருந்தோட்டப் பயிராகச் செய்கை பண்ணக்கூடிய பயன்தரு வளம் பனைக்கு உண்டு.

போர் காரணமாக இரண்டு சந்ததிகளுக்கு வருமானம் தரக்கூடிய பல்லாயிரக்கணக்கான பனைகள் அழிக்கப்பட்டு விட்டன.

குடாநாட்டின் தெங்குச் செய்கையும் போரினால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது; அழிந்து போயுள்ளது. தென்னைகளின் உயர் பயன் கருதாது அவை தொடர்ந்து தறிக்கப்படுகின்றன. இராணுவ நடவடிக்கைகளின்போது, வானத் தாக்குதல்களின்போது ஆயிரக்கணக்கான தென்னைகள் அழிக்கப்பட்டன.

அது போதாதென்று இப்போதும் பாதுகாப்புப் படையினரால் எவ்வித கூச்சமும் இன்றி, தெங்கினால் கிடைக்கக் கூடிய பொருளாதாரப் பாதிப்புக்களைச் சற்றும் கருத்தில் கொள்ளாமல் தறிக்கப்படுகின்றன.

ஒரு தென்னை மரத்தை நட்டு, வளர்த்து அதிலிருந்து பயன்பெறச் சுமார் பத்து வருடங்களாகும். அந்தக் காலத்தில் அதனைத் தக்கவாறு பராமரிப்பதற்குப் பெரும் பணச் செலவாகும்; உடலுழைப்பும் தேவை.

தென்மராட்சிப் பகுதியில் உள்ள தென்னந்தோட்ட உரிமையாளர்கள் தங்கள் தோட்டங்களுக்குச் சென்று அவற்றின் அபிவிருத்திக்கு உழைக்க முடியாத நிலை கடந்த ஒரு வருட காலமாக நிலவுகிறது. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போன்ற துரதிர்ஷ்ட நிலை இதுவாகும்.

தென்மராட்சிப் பிரதேசத் தென்னந்தோட்டங்களில் பல்வேறு வகைகளிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆயிரக்கணக்கானோர் வேலை வாய்ப்பும் பெற்றிருந்தனர். அவர்கள் இன்று தமது ஜீவனோபாயத்துக்குப் பெரும் கஷ்டப் படுகின்றனர்.

ஆகையால், வடமாநில தெங்கு உற்பத்தியாளர் சங்கம் அமைச்சர் தேவானந்தாவிடம் சமர்ப்பித்த மகஜரில் கேட்டிருந்தது போல, தென்னையினால் கிடைக்கும் வருமானத்தையே நம்பியிருந்த அனைவருக்கும் நிவாரணம் வழங்குவது மிக அவசியம்.

அது மாத்திரமன்றி, தென்மராட்சியின் தெங்குச் செய்கை குடாநாட்டின் பொருளதார, சமூகத் துறைகளின் முன்னேற்றத்துக்குக் கைகொடுக்கும் ஓர் அங்கம் என்பதனை மனதிற் கொள்ள வேண்டும். அதனை முந்திய நிலைக்குக் கொண்டு வர—தேங்காய் உற்பத்தியைப் பெருக்குவதற்கு — தோட்ட உரிமையாளருக்கு வேண்டிய ஆதரவை, உதவிகளை, வசதிகளை வழங்கவேண்டும்.

தென்னைச் செய்கையை ஊக்குவித்து ஆதரவளித்து அதன் வளர்ச்சிக்கு உதவினால், குடாநாட்டின் தேங்காய்த் தேவையில் ஒரு கணிசமான வீதத்திலாவது சுயதேவையைப் பூர்த்தி செய்யலாம்.

இப்போதைய பாதிப்புகளை நிவர்த்தி செய்வதோடு மட்டுமன்றி, எதிர்கால வளர்ச்சிக்கான குறுகிய காலத் திட்டங்களும் நீண்டகாலத் திட்டங்களும் அவசியம்.

அதாவது, குடாநாட்டு மக்களுக்கு மட்டுமன்றி தெங்குச் செய்கை போன்ற பொருளாதார வளர்ச்சி விடயங்களுக்கும் புனர்வாழ்வு தேவை.

# யாழ். விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து ஆராய விசேட செயலமர்வு

## பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றுவர்

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ். மாவட்ட விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான விசேட செயலமர்வு ஒன்று இம் மாதம் 24 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக விவசாயபீட மண்டபத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பல்கலைக்கழக விவசாய பீடமும் யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்களமும் இணைந்து நடத்தவுள்ள இந்தச் செயலமர்வில் விவசாயிகளின் பிரச்சினைகள் அவர்களுக்கான தேவைகள் என்பன பற்றி ஆராயப்படும்.

இந்தச் செயலமர்வில் விவசாயபீடம், கமநல சேவைகள் திணைக்களம், விவசாயத் திணைக்களம், விவசாய ஆராய்ச்சி நிலையம் மற்றும் கால்நடைத் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளும் பட்டினிக்கு எதிரான நிறுவனம், ஐ நா. அபிவிருத்தி நிறுவனம், கெயர் நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

விவசாயிகளின் பிரச்சினைகளைத் தெரிவிப்பதற்காக 100 விவசாய சம்மேளனங்களைச் சேர்ந்த விவசாயிகளும் கலந்து கொள்வதுடன் சிறப்புப் பிரதிநிதிகளாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதனும், பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. பாலசுந்தரம் பிள்ளையும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர்.

(க–10–ரி)

## 6 ஊழியருக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் தற்காலிகமாகக் கடமையாற்றிய 4 சிற்றூழியர்களுக்கும் 2 காவலாளிகளுக்கும் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சிற்றூழியர்களாகக் கடமையாற்றிய எஸ் வசந்தகுமார் ஐ கனகராஜா, பி. செபராஜன், ப கண்ணன் ஆகியோருக்கும் காவலாளிகளாகக் கடமையாற்றிய எஸ். மணிவண்ணன், எஸ் சிறிகாந்தன் ஆகியோருக்குமே கடந்த மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

(க-6)

## சங்கானையில் விரைவில் புதிய பொலீஸ் நிலையம்

சங்கானை, மார்ச் 1

சங்கானைப் பகுதியில் விரைவில் பொலீஸ் நிலையம் ஒன்று திறக்கப்படவுள்ளது.

இதற்காக, தற்போது சங்கானை இராணுவ முகாம் அமைந்துள்ள கட்டடத்தின் ஒரு பகுதி திருத்தப்பட்டு வருகின்றது.

மானிப்பாய் பொலீஸ் நிலைய அலுவலர்களுடன் இது பற்றித் தொடர்பு கொண்டபோது, முறைப்பாடு மற்றும் சிறுசிறு விசாரணைகள் சங்கானை நிலையத்தில் மேற்கொள்ளப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

புதிய பொலீஸ் நிலையம் சங்கானை மக்கள் வங்கியின் முன்பு சந்தை, பஸ்நிலையம், பிரதேச செயலர் காரியாலயம் உள்ள—பொதுமக்கள் பாவனைக்குட்பட்ட —பிரதேசத்தில் அமையவுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

(உ-29)

## வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் அடுத்ததாக ஷியாம் பெனகலின் மந்தான் (Manthan) எனும் குஜராத் தலித் மக்களின் வாழ்வை சித்திரிக்கும் திரைப்படம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் ஒளிபரப்பப்படும்.

ஆர்வலர்கள் எவரும் பங்குபெறலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவிக்கின்றார்.

(௧)

## தவற விடப்பட்ட ஒரு லட்சம் ரூபா ஊழியர் சம்பளப் பணமே சிப்பாயால் ஒப்படைப்பு

தென்மராட்சி, மார்ச் 1

சாவகச்சேரிப் பகுதியில் லான்ஸ் கோப்ரல் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு நகரசபைச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு லட்சம் ரூபா பணம் ஊழியர்களின் பெப்ரவரி மாதச் சம்பளப் பணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஊழியர்களின் சம்பளம் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்ட பின்னர் மிகுதித் தொகையான ஒரு லட்சத்து 700 ரூபாவும் வவுச்சர்களும் (Pay Sheet) சபை சிறாப்பரால் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் —

மறுநாள் சாவகச்சேரியில் உள்ள அலுவலகத்தைப் பார்வையிட நகரசபைத் தலைவருடன் அவசரமாகச் சென்றதால் உத்தியோகக் கைப்பையை எடுத்துச் சென்றதாகவும் சம்பளப் பணம் இருந்ததை மறந்து போனதால் அவை தவறியதை அவதானிக்கவில்லை எனவும் —

சம்பள விவரப் பட்டியலுடன் பணம் இருந்தமையாலே அவை திருப்பி ஒப்படைக்க கூடியதாக இருந்ததாகவும்—

செயலாளர் மு. செ. சரவணபவ தெரிவித்தார்.

சம்பளப் பணத்தை கண்டெடுத்து வழங்கிய லான்ஸ் கோப்ரல் ஏ. பி. பி. ரத்நாயக்காவுக்கு நகரசபையின் தலைவர் பெனடிக் தனபாலசிங்கம், செயலாளர் மு செ. சரவணபவ மற்றும் உத்தியோகத்தர், ஊழியர்கள் நன்றியினைக் தெரிவித்துள்ளனர்.

(உ–117-31)

## இன்று மேயருக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 1

சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் யாழ். மாநகரசபையின் மேயர் ந. ரவிராஜை கௌரவிக்கும் வைபவம் இன்று வியாழக்கிழமை மலை 4.30 மணிக்கு கல்லூரியின் பீற்றோ மண்டபத்தில் இடம்பெறும்.

(க–10)

## நாளை

மாசி 18

வெள்ளிக்கிழமை

திதி: ஸப்தமி

பிற்பகல் 4-26 வரை.

நட்சத்திரம்: கார்த்திகை

பிற்பகல் 12-46 வரை.

சுபநேரம்: 6.28 — 7.58

ராகுகாலம்: 10.58 – 12.28

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## நிவாரணப் பத்திரம் வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 1

பச்சிலைப்பள்ளியில் இருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை, கரவெட்டி, சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் வசித்து வருபவர்களுக்கான பெப்ரவரி மாத நிவாரண அனுமதிப் பத்திரம் இன்றும் நாளையும் வழமையான இடங்களில் வைத்து வழங்கப்படும் என்று பளைப் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி அறிவித்துள்ளார்.

(உ–3)

## தீவகப் போக்குவரத்து: மக்கள் கவலை தெரிவிப்பு

ஊர்காவற்றுறை, மார்ச் 1

தீவுப்பகுதிகளுக்கும் — ஊர்காவற்றுறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் படகுகள் அடிக்கடி பழுதடைவதனால் இப்பகுதிகளுக்கிடையிலான போக்குவரத்து அடிக்கடி சீர்குலையும் நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவுப் பகுதிகளுக்கும் இடையே சேவையில் ஈடுபட்டு வந்த ஆறு படகுகளில் தற்சமயம் மூன்று படகுகளே இயங்கும் நிலையில் உள்ளன.

அனலைதீவு, எழுவைதீவுப் பகுதிகளிலிருந்து தினமும் சுமார் ஐந்நூறு பயணிகள் வரை ஊர்காவற்றுறை ஊடாகப் பயணத்தை மேற்கொண்டு வருவதுடன் இப்பகுதிகளில் பிடிபடும் பெருமளவு மீன்களும் இப்படகுகளிலேயே எடுத்துவரப்படுகின்றன.

இவ்வாறு வரும் படகுகள் மீண்டும் மாலையில் திரும்புகின்றன. ஊர்காவற்றுறையில் இருந்து பிற்பகல் 2.00 மணிக்கு எழுவைதீவு, அனலைதீவு நோக்கி ஒரு படகும், மாலை 5.00 மணிக்கு எழுவைதீவு அனலைதீவு பகுதிகளுக்கு தனித்தனியே ஒவ்வொரு படகுகளும் புறப்படுகின்றன.

இவற்றில் பிற்பகல் 2.00 மணிக்குப் புறப்படும் படகிற்கு அதிக அளவு பயணிகள் வருகின்ற போதிலும் படகோட்டிகள் குறிப்பிட்டளவான பயணிகளையே படகுகளில் ஏற்றக்கூடியதாக உள்ளது. இதனால் படகோட்டிகளுக்கும் பயணிகளுக்கும் இடையில் முரண்பாடுகளும் தர்க்கமும் அடிக்கடி ஏற்படுகின்றன.

இப்பகுதிகளுக்குச் செல்லும் அரச ஊழியர்கள், ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய சாலைக்கு வந்து செல்லும் கர்ப்பிணித் தாய்மார்கள், வயோதிபர்கள், சிறுவர்கள் கொளுத்தும் வெயிலின் மத்தியில் காத்து நின்றும் படகுகளில் இடம் கிடைக்காமல் போவது குறித்து விசனம் தெரிவிக்கின்றனர்.

சில சமயங்களில் இப்படகுகளில் நிவாரணப் பொருள்கள், கட்டடப் பொருள்கள் ஏற்றப்பட்டு பயணிகளின் இடம் பறிபோவதுமுண்டு. அத்தோடு படகுகள் விசேட வைபவங்களுக்காக வாடகைக்கு அமர்த்தப்படும் சமயங்களில் உரிய நேரத்தில் படகுசேவை இடம்பெறாமல் போவதுமுண்டு.

இப்போக்குவரத்து நெருக்கடிகள் குறித்து அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் பாராமுகமாக இருப்பதைப் பற்றி தீவக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(உ–16)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 1

கோப்பாய்ப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடக்கும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விபரம் வருமாறு:-

★ பிற்பகல் 3 30 மணி — கோப்பாய் வானவில் வி. க. எதிர் நீர்வேலி ஐக்கிய வி. க.

★ மாலை 4.30 மணி — புத்தூர் வீனஸ் வி. க. எதிர் உரும்பிராய் இளைஞர் வி. க.

(க – 3)

★ ★ ★

வலி வடக்கு. மார்ச் 1

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3. மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும்.

ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகள் வருமாறு:-

★ கொக்குவில் நேதாஜி வி க. எதிர் நல்லூர் சீசொக்ஸ் வி க.

★ அரியாலை ஐக்கிய வி. க. எதிர் மகாத்மா வி க.

(க–86)

★ ★ ★

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 19 வயது பிரிவுக்கு உட்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ளும் தோற்பந்து போட்டிகளில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் சனிக்கிழமை காலை 8.30 மணி முதலும் நடைபெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு!

★ கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி (மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானம்.)

★ யாழ். மத்திய கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி (யாழ் மத்திய கல்லூரி மைதானம்.)

★ சென். ஜோன்ஸ் கல்லூரி எதிர் சென் பற்றிக்ஸ் கல்லூரி (சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானம்)

(க-8)

## கசிப்பு வழக்குகள்: 55 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட குடாநாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த 9 பேருக்கு மொத்தம் 55 ஆயிரம் ரூபா அபராதப் பணம் செலுத்துமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் இ த. விக்னராஜா நேற்று உத்தர விட்டார்.

அத்துடன் 9 பேரையும் ஆட்பிணையில் செல்வதற்கும் நீதிவான் அனுமதி வழங்கினார்.

(க-10-ரி)

### உதயவாக்கு

அழகான உடலைத் தேடாதே, அறிவுள்ள மனதைத் தேடு

## வல்வை நகரசபைத்தலைவர் கோரிக்கை

# கண்ணிவெடி அகற்றும் பணியை அரசே ஏற்றுச் செய்ய வேண்டும்

## வெளிநாட்டு நிபுணர்கள் அவசியமில்லை என்கின்றார்

யாழ்ப்பாணம், மார்ச் 1

தென்மராட்சியில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை அரசாங்கமே பொறுப்பெடுத்துச் செய்விக்க வேண்டும் என்று வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் எம். கே. சிவாஜிலிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு — கிழக்கு தமிழ் விவகார, இந்து கலாசார அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற —தென்மராட்சி மீளக்குடியமர்தல் தொடர்பான — கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ் சிவதாசன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வல்வை நகரசபைத் தலைவர் மேலும் கூறியதாவது:-

கண்ணிவெடிகளை அகற்றும் திட்டத்துக்கு வெளிநாட்டுநிபுணர்கள் எவரையும் அமர்த்த வேண்டாம்.

கண்ணிவெடிகள் அகற்றும் திட்டம் ஒன்று ஏற்கனவே நடைமுறையில் இருக்கிறது. பல வருடங்களாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போதும் இதுவரையும் பூர்த்தி செய்யப்படவில்லை.

எனவே இத்தகைய நிபுணர்களின் கையில் இத்திட்டத்தை ஒப்படைத்தால் எத்தனை வருடங்களானாலும் தென்மராட்சியில் கண்ணிவெடிகளை அகற்ற முடியாது.

வன்னியில் விடுதலைப்புலிகளின் வெண்புறா இயக்கம் மிகச் சிறப்பான முறையிலே குறைந்த செலவில் அங்கு மிதிவெடிகளை அகற்றி வருவதனை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எனவே இந்த கண்ணிவெடியகற்றும் பணியை அரசாங்கமே முழுமையாக பொறுப்பெடுத்து படையினர் மூலம் அதனைச் செய்விக்க வேண்டும்.

தென்மராட்சி மீள்குடியமர்வு அபிவிருத்தி பற்றி இன்று நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால் பத்து வருடத்துக்கு முன்பு மீள்குடியமர்வு நடைபெற்ற தீவுப் பகுதியில் இதுவரையும் எந்தவிதமான அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படவில்லை

இதபோன்று வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளிலும் புனரமைப்பு வேலைகள் எதுவும் இதுவரையும் மேற்கொள்ளப்படவில்லை.

இன்றைய நிலையில் அழிந்து போயுள்ள தென்மராட்சிப் பிரதேசத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கினாலும் போதாமலிருக்கும்.

பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டால் தான் தென்மராட்சியை மீண்டும் கட்டியெழுப்ப முடியும்.

### புதிய கலாசாரம்

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஆலய சட்டடங்களுக்கு மில்லியன் கணக்கில் நிதி ஒதுக்கீடு செய்யும் புதிய கலாசாரம் ஏற்பட்டுள்ளது.

ஆலயங்களுக்கு நிதி ஒதுக்குவது பற்றி நான் முரண்பாடானவன் அல்லன். ஆனால் ஆலயக் கட்டடங்களுக்கு ஏன் இவ்வாறு பெரும் நிதி ஒதுக்கப்பட வேண்டும்?

ஆலயங்களுக்குத் தேவையான நிதியை 'நான்' அமைப்புத் தாராளமாக வழங்க வேண்டும். பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து ஆலயங்களுக்கு நிதி ஒதுக்க வேண்டாம்.

வடக்கு புனர்வாழ்வு புனரமைப்புக்கு இரு நூறு கோடி ரூபா ஒதுக்கப்படும் என்று முன்னர் கூறப்பட்டது. ஆனால் நூறு கோடிமட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதி புனரமைப்புத் திட்டங்களுக்கு அள்ளித்தெளித்தது போல் இருக்கிறது. குறைந்தளவு நிதியை ஒதுக்கி இந்த அரசாங்கம் எங்களை முட்டாளாக்கப் பார்க்கிறது.

யாழ். குடாவில் புனர்நிர்மாண வேலைகளைச் செய்வதற்கு நூறுகோடி ரூபா போதுமானதல்ல. எனவே மேலும் பல கோடிக்கணக்கான ரூபாக்களை ஒதுக்கினால் தான் இந்த வேலைகளைச் செய்ய முடியும் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் அங்கு உரையாற்றும் போது:-

இந்திய அரசாங்கத்தினால் யாழ். குடாவில் அபிவிருத்திக்கு வழங்கப்படவிருக்கும் நிதியில் இருந்து சிமெந்து மற்றும் கட்டடப்பொருள்கள் பெறப்பட்டு இந்தியாவில் இருந்து கப்பலில் காங்கேசன் துறைக்கோ அல்லது பருத்தித்துறைக்கோ நேரடியாகக் கொண்டுவரப்படும்.

ஏற்கனவே இவ்வாறு பொருள்களைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட போதும், துரதிர்ஷ்டவசமாக குஜராத்தில் ஏற்பட்ட நிலநடுக்கச் சம்பவம் காரணமாக பொருள்கள் வந்து சேர்வதில் தாமதம் ஏற்பட்டது.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் ஒரு பகுதியையேனும் இயங்கச் செய்யும் முயற்சிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வருகிறார் — என்றும் கூறினார். (உ-5)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 1

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் திறன் விருத்தி மையத்தினால் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்ப முடிவு தினம் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

## ஊனமுற்றோருக்கு சக்கர நாற்காலிகள்


நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் ஊனமுற்றவர்களில் 5 பேருக்கு முச்சக்கர வண்டிகளையும் 4 பேருக்கு சக்கர நாற்காலிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 15 ஆம் திகதி நல்லூர் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ள முச்சக்கரவண்டிகளையும், நாற்காலிகளையும், வடகிழக்கு மாகாண சமூக சேவை திணைக்களம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இதேவேளை—

கண்பார்வை குறைந்த 12 பேருக்கு கடந்த வெள்ளிக்கிழமை நல்லூர்ப் பிரதேச செயலர் அலுவலகத்தில் வைத்து இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டுள்ளன. (ெ—6)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் நல்லதம்பி சீனித்தம்பி

தோற்றம் 06—10—1917 மறைவு 11—03—2000

திதி:- 01 - 03 - 2001 வியாழக்கிழமை

ஆண்டொன்று சென்றாலும்
ஆறுமோ எங்கள் துயரம்!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கொட்டைக்காடு லேன்,
கோண்டாவில் கிழக்கு.

(84711)

## ஏல விற்பனை

யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில்
இரண்டு (2) கறவைப்பசுக்கள்
ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏலவிற்பனைத் திகதி:
03-03-2001 சனிக்கிழமை மு.ப. 10 மணி

ஏலவிற்பனை நடைபெறும் இடம்:
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

முன்கூட்டியே பார்வையிட விரும்புபவர்கள் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய். (சி/15500)

## குடைச் சுவாமிகளின் 22 ஆவது குருபூசை



கோண்டாவில் கிழக்கு
ஸ்ரீஅற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தில்
மகா சமாதிக் கோயில் கொண்டருளிய

### குடைச் சுவாமிகளின்

22 ஆவது குருபூசைத் தினம்
நாளை [2-3-2001] வெள்ளிக்கிழமை நடைபெறும்.

அன்றைய தினம் திருவாசக முற்றோதலும் இடம்பெறவுள்ளதால் திருவாசகம் முற்றோதுபவர்கள் முழுவதும் ஓதுவதற்குரிய முறையில் வரவும். நண்பகல் மாகேஸ்வர பூசையும் நடைபெறும்.

உபயகாரர்கள்:
கோண்டாவில் கிழக்கு வர்த்தகர்கள்
கா. வே. சரவணமுத்து

(84748)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 — 12 — 1935



உதிர்வு 01 — 03 — 2000

அமரர்

### வைரமுத்து அன்ரன் சிவலிங்கம் (J.P.)

அன்பின் இருப்பிடமாய்,
பாசத்தின் பிறப்பிடமாய்,
பண்பின் உறைவிடமாய் - இருந்து
எம்மைக் கண்ணெனக் காத்த தந்தையே!
எம்மைக் கதிகலங்க வைத்தீரே!
காலம் பல சென்றாலும் எம் நெஞ்சு
கசிந்துருகும் உம்மை நினைத்து!

உமது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

5 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(84678)

## யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்தோருக்கு

# நிரந்தரக் குடியிருப்பு அமைக்கும் திட்ட நடவடிக்கைகள் மும்முரம்

முளாய்,மார்ச்1

யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிரந்தரக் குடியிருப்புக்களை அமைக்கும் செயற்றிட்டத்தை திட்டமிட்டபடி நடைமுறைப்படுத்துவதற்கு யாழ்.செயலகம் துரித நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இச் செயற்றிட்டத்தை நடைமுறைப் படுத்தும் நோக்குடன் முதற்கட்டமாக, அரச செலவில் வீடமைப்புக்குப் பொருத்தமான காணிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. வலிகாமம் மேற்கு, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் பொருத்தமான காணிகளை தெரிவு செய்யும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளன.

அதேவேளை மேற்படி பிரதேச செயலர் பிரிவுகளில் இதுவரை இத் திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்ட காணித்துண்டுகளை நில அளவை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இவ்விடயம் சம்பந்தமாக யாழ். அரச அதிபர் நில அளவைத் திணைகளத்துக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, உடுவில் ஆகிய பகுதிகளில் தெரிவு செய்யப் பட்டிருக்கும் காணித்துண்டுகளை நில அளவை செய்து உரிய அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி அரச அதிபர் தனது கடிதத்தில் நில அளவைத் திணைக்களத்தைக் கேட்டுள்ளார். இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கும், அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் பலர் பல வருடங்களாக தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக்குடியமர முடியாமல் இருக்கின்றனர்.

இவ்வாறான குடும்பங்களுக்காகவே மேற்படி நிரந்தரக் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டு, நிரந்தரமான அகதிகள் குடியிருப்பாக அல்லது இடம்பெயர்ந்தோருக்கான நலன்புரி நிலையங்களாக அவை அரச செலவில் பராமரிக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (உ-95)

## யாழ்.இந்து முன்னாள் பிரதி அதிபர்

# சிவராமலிங்கம்பிள்ளையின் பவளவிழா நிகழ்வு ஞாயிறு

யாழ்ப்பாணம்,மார்ச்1

பிரபல கல்விமானும் யாழ்.இந்துக் கல்லூரி முன்னாள் பிரதி அதிபருமான க.சிவராமலிங்கம்பிள்ளையின் பவளவிழா நிகழ்வுகள் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் கே.எஸ்.சுப்பிரமணியம் அரங்கில் நடைபெறவுள்ளன.

யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையின் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும், தென்னிந்திய திருச்சபை பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசனும் ஆசியுரை வழங்குவர்.

மூதறிஞர் க.சொக்கலிங்கம் பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கி கௌரவித்த பின்னர் சபையோரின் கௌரவிப்பு இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பாராட்டுரைகளும் பவள விழா நூல் வெளியீடும் இடம்பெறும். (உ-3)

# உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இவ்வாண்டு ரூ.100 கோடி நிதியுதவி

## வளர்ச்சி, அபிவிருத்தி திட்டங்களுக்கு

வலி.தென்மேற்கு.மார்ச்1

2001ஆம் ஆண்டில் யாழ்-மாவட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அபிவிருத்திப் பணிகளுக்காக நூறு கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப் படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச சபைகள் மற்றும் நகரசபைகள், மாநகர சபைகளுக்கு இவ் வருடம் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான திட்ட முன்மொழிவுகளுக்கு நிதி வழங்கப்படவுள்ளது.

உள்ளூராட்சி நிறுவனங்களில் கடமையாற்றும் திட்டப் பொறுப்பாளர்களான உள்ளூராட்சி உதவியாளர்களே மேற்படி நிதி ஒதுக்கீட்டுக்கான திட்டங்களை கையாளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-185)

## அடுத்த ஆண்டில்

# அரசாங்க ஊழியர்களின் விடுமுறைகள் குறையும்

அடுத்த ஆண்டுமுதல் அரசாங்க பொது விடுமுறை நாள்களின் எண்ணிக்கையையும் அரசாங்க ஊழியர்களின் தனிப்பட்ட விடுமுறை நாள்களையும் கட்டுப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

தற்போது நிலவும் பலவீனமான அரச சேவைகளைக் கருத்தில்கொண்டே அரசு மேற்படி முடிவை எடுத்திருக்கிறது.

அரசாங்க சேவைகளின் செயற்பாடுகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்பு தற்போது தேவேந்திர ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணைக்குழு மூலம் ஐரோப்பிய நாடுகளின் அரசாங்க விடுமுறைகள் மற்றும் அரச ஊழியர்களின் தனிப்பட்ட விடுமுறைகள் தொடர்பான விவரங்களை அரசு திரட்டியுள்ளது.

பெறப்பட்ட விவரங்களின்படி உலகிலே அதிக விடுமுறைகளைக் கொண்ட நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தை வகித்துவருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் மேற்படி விடுமுறை நாள்களைக் குறைக்கும் முயற்சிக்கு கடும எதிர்ப்பைக்காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-20)

# வலிகாமம் மேற்குப் பகுதிக்கான எரிபொருள் விநியோகம் பாதிப்பு

முளாய்,மார்ச்1

வலிகாமம் மேற்குப்பகுதிக்கான எரிபொருள் விநியோகம் மீண்டும் சீர்குலைந்துள்ளது.

இப்பகுதிக்கான பிரதான எரிபொருள் விற்பனை நிறுவனமான சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் குதங்கள் கடந்த பல நாள்களாக காலியாகக் காணப்படுகின்றன.

சித்தங்கேணியில் உள்ள பிரதான எரிபொருள் விற்பனை நிலையத்தின் முன்பாக 'இல்லை' என்ற சொல் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. பாவனையாளர்கள் அங்கு சென்று ஏமாற்றத்துடன் திரும்புவதையும் அவதானிக்க முடிகிறது.

இவ் விடயம் நேற்றுமுன்தினம் வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் எழுப்பப்பட்டது.

பெற்றோலிய கூட்டுத்தாபனம் தமக்கு கிரமமாக எரிபொருள்களை அனுப்புவதில்லை எனவும் -

தனியார் எரிபொருள் விற்பனை முகவர்களுக்கே முன்னுரிமை கொடுத்து எரிபொருள்கள் விநியோகிக்கப்படுவதாகவும் -

திட்டமிடப்பட்டு தாங்கள் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும்,

மேற்படி பலநோக்குக் கூட்டுறவுச சங்கத்தின் பொது முகாமையாளர் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மீது குற்றம் சுமத்தும் வகையில் இக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து விவரங்களை கேட்டு அறிந்து கொண்ட வலி.மேற்கு பிரதேச செயலக அதிகாரிகள் இது குறித்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு எரிபொருள் விநியோகத்தை சீரமைக்க நடவடிக்கை எடுப்பதாக இக்கூட்டத்தில் தெரிவிக்கனர் (உ-99)

## பளைப் பிரிவு சாரணருக்கு

வடமராட்சி,மார்ச்1

கிளிநொச்சி மாவட்ட தென்மராட்சி, பளை பிரிவுகளைச் சேர்ந்த - கலைக்கூறு I, II, III பயிற்சி பெற்ற - சகல சாரண, குருளைச் சாரண தலைவர்களும், புதிதாகப் பயிற்சி பெற விரும்புபவர்களும் தமது தற்போதைய முகவரியினை "உதவி மாவட்ட ஆணையாளர், தென்மராட்சி கல்வி வலயம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கரவெட்டி" என்ற விலாசத்துக்கு அறியத் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கலைக்கூறு II பயிற்சி நெறி நாளை வெள்ளிக்கிழமை நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(உ-173)

## தடம் புரண்ட டிராக்டர்

தென்மராட்சி,மார்ச்1

மிருசுவில் பகுதியிலிருந்து மரம் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தின் பெட்டி தடம் புரண்டதில் மரங்களின் மேல் இருந்து வந்த இளம் குடும்பஸ்தர் மரங்களுக்கிடையில் சிக்கி சுயநினைவை இழந்தார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் கரவெட்டி யார்க்கரும் பகுதியில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் சிக்கிய மிருசுவிலில் இருந்து இடம்பெயர்ந்து நாவலர் மடம் முகாமில் தங்கியுள்ள வேலும் மயிலும் நந்தகுமார் (வயது 28) என்பவரே மயக்கமுற்ற நிலையில மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டார். (உ-117)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்.1

யாழ்.பல்கலைக்கழக இளம் பொருளியல்துறை மன்றத்தினரது ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள கருத்தரங்கில் "சமநிலைத் தேசிய வருமானம்" என்ற தலைப்பில் பொருளியல்துறைத் தலைவர் வி.பி.சிவநாதன் கருத்துரை வழங்குவார்.

கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் பொருளியல் கற்கும் மாணவர்கள் அனைவரையும் கலந்து பயனடையுமாறு இளம் பொருளியல்துறை மன்றத்தினர் கேட்டுள்ளனர். இது தொடர்பாக பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

## காணாமற்போனோர் பற்றிய

# விசாரணைகளுக்கு வருமாறு அழைக்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம்,மார்ச்1

காணாமற்போனோர் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தற்பொழுது நடைபெற்றுவரும் விசாரணைக்கு சமுகமளிக்குமாறு பின்வருவோருக்கு குற்றப் புலனாய்வு பிரிவினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது:-

- ரஜனிகாந்தன், சசிகாந்தன், மேகலா, ஜெயா. புங்கன்குளம் வீதி யாழ்ப்பாணம் - பிரசாந்த் ஜெயகாந்தன் காணாமல்போனது தொடர்பாக)
- முருகேசு வரலட்சுமி, செல்வம் (சிவசுப்பிரமணியம் ரவீந்திரன் காணாமல் போனது தொடர்பாக)
- பரமநாதன் மகேஸ்வரி, மாணிககம ஈஸ்வரி, கந்தையா ஆனந்தராஜா (மூவரும் தணங்கிளப்பு - சாவகச்சேரி மகேஸ்வரன் தயாபரன் காணாமல் போனது தொடர்பாக)

செல்வரத்தினம் பரம்சோதி, சுதாகரன் சுப்பிரமணியம் (ஆள்காட்டு ஒழுங்கை அரியாலை - செல்வரத்தினம் பார்த்தீபன் காணாமல்போனது தொடர்பாக)

- அந்தோனி டொமினிகா (புதிய வீட்டுத்திட்டம், பாசையூர் - அந்தோனி அனிஸ்ரன் ஜெஸ்தின் காணாமல் போனது தொடர்பாக)
- பாலு கேதீஸ்வரன், கந்தையா சுப்பிரமணியம் (அம்மன் கோயிலடி, அராலி கிழக்கு-அமிர்தலிங்கம் விஜேந்திரன் காணாமல்போனது தொடர்பாக)
- சிவபாலன் யோகேஸ்வரி (சுழிபுரம் வடக்கு, மகேந்திரன் காணாமல் போனது தொடர்பாக)
- இளையதம்பி கந்தசாமி (நாவற்குழி தெற்கு, கைதடி-அரசமணி கோடீஸ்வரன் காணாமல் போனது தொடர்பாக)
- கதிர்வேலு அருந்தவநாயகி, மாரிமுத்து கதிரவேலு (சரசாலை தெற்கு, சாவகச்சேரி - கதிரவேலு விஜிதரன் காணாமல் போனது தொடர்பாக)
- இராஜரத்தினம் முருகானந்தன (கொழும்புத்துறை கிழக்கு-சிவசம்பு விஜயகாந்தன் காணாமல் போனது தொடர்பாக)
- சதாசிவம் சிவகுருநாதன், நாகலோகதேவி, யோகராணி திருநெல்வேலி- ஆனந்தகிருஷ்ணன் காணாமல போனது தொடர்பாக)
- மேரியூப்ராணியா பூமணி (பாடசாலை வீதி, நாவற்குழி- இமானுவேல் மரியஜயசீலன் காணாமல்போனது தொடர்பாக)

இவர்களைத்தவிர கைதடி தெற்கு, கைதடியில் வசித்த ஜீ.கிருபாகரன், அனலேஸ்வரன் அமல்ராஜ் (யாழ்ப்பாணம்), பெனடிக்ற் அல்போன்ஸ் (மத்திய கிழக்கு வீதி- குருநகர் யாழ்ப்பாணம்), ஜீவராஜ் மதியழகன் (சுழிபுரம்) ஆகியோர் காணாமல்போனது தொடர்பான முறைப்பாட்டுக்காரர்கள். (பெயர் விவரம் குறிப்பிடப்படவில்லை).

# பழ அறுவடைக்குத் தயாரான தோட்டத்தின் நிலையில் சந்தை!

தென்மராட்சி,மார்ச்1

சாவகச்சேரி நகருக்கு பெருமை சேர்த்த பொதுச்சந்தையின் கட்டடங்களும், கடைகளும், தரைமட்டமாகி புற் பற்றைகளாகக் காணப்படுகின்றன. சந்தையின் உட்புறத்தில் தக்காளி, பூசனி, கத்தரி, மிளகாய், வெள்ளரி, நீற்றுப்பூசனி, பாகல் போன்ற மரக்கறி வகைகளும் பப்பாசி போன்ற பழமரக் கன்றுகளும் வளர்ந்துள்ளன. இச் செடிகளில் பழங்கள் அறுவடை செய்யக்கூடிய நில்லயில் காணப்படுகின்றன.

பொதுச் சந்தை, பஸ் நிலையம், விளையாட்டு மைதானம் ஆகியவற்றுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கவென சந்தையில் நிர்மாணிக்கப்பட்டு- வேலைகள் பூர்த்தியடைந்திருந்த - தண்ணீர்த் தொட்டி நிலத்தில் சாய்ந்து காணப்படுவதாக நில்மையைப் பார்வையிடச்சென்ற சாவகச்சேரி நகர சபையின் தலைவர், செயலாளர் ஆகியோர் தெரிவித்தனர். (உ-31-117)

## தற்போதைய யுத்தத்தால்

# சாவகச்சேரி வர்த்தகர்களுக்கு மொத்தம் ரூ 22 கோடி நஷ்டம்

தென்மராட்சி,மார்ச்.1

சாவகச்சேரி நகரப் பகுதியில் இடம்பெற்ற யுத்தத்தினால் இப்பகுதியல் உள்ள வர்த்தகர்களுக்கு சுமார் 22கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

வர்த்தக நிலையங்களில் கைவிட்டு வந்த வியாபாரப் பொருள்கள் மற்றும் உடைமைகள் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட மொத்த இழப்பீடுகளின் பெறுமதி இதுவென சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நகரப் பகுதியில் உள்ள 287 வர்த்தகர்களால் வழங்கப்பட்ட இழப்பீடுகளின் விவரங்கள் மன்றப் பிரதிநிதிகளால் மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் இழப்பீடுகளின் மொத்தப் பெறுமதி 21 கோடியே 51 லட்சத்து 52 ஆயிரத்து 725 ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது.

வர்த்தகர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பீடுகளுக்கு நட்டஈடு பெற்றுத் தருமாறு வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிடம் மன்றத்தினர் கேட்டுள்ளனர். (உ-117)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மார்ச் 10இல் பொன்விழாக் காணும்

### உயர்திரு.க.தேவராஜா


(வணிகத்துறைத் தலைவர் - யாழ்.பல்கலைக்கழகம்)

பெரியவர் – சிறியோர் என்று பெருமை கொள் தலையோ – அன்றி
உடையவர் – இல்லார் என்று உலகு செய் தவறோ இன்றி
உதவிடும் குறைமொன்றாலே உடனிருந்(து) எல்லா அன்பர்
நிகழ்விலும் தான் ஒன்றாக நினைந்திடும் தேவர் வாழ்க!

(84704) அதிபர், ஆசிரியர், ஆளணியினர்.



யாழ்.வை.எம்.சி.ஏ. அண்மையில் நடத்திய சமாதானத்துக்கான சுவரொட்டிக் கண்காட்சியை அந்த அமைப்பின் தலைவர் டி.ஆர்.அருமைநாயகம் நாடாவை வெட்டி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.



யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், காணாமற் போன குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு கைகொடுத்தல் நிதி வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஒரு சிறுமிக்கும் யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண.ஏ.ஐ.பேர்னாட் மற்றொரு சிறுமிக்கும் நிதி உதவிக்குரிய வங்கிப் புத்தகங்களை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# வடக்கு, கிழக்குக் கடலில் எண்ணெய் வள ஆய்வுகள்

கொழும்பு,மார்ச்1

ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்றின் உதவியுடன் இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் தென்பகுதியில் எண்ணெய்வள ஆய்வுகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது என்ற தகவலை ஆசிய அபிவிருத்தி வங்கி வட்டாரங்கள் நேற்று ஊர்ஜிதம் செய்தன.

வடக்கில் மன்னார்ப் பகுதியிலுள்ள கடலிலும் கிழக்கில் முல்லைத்தீவு, மட்டக்களப்பு கடற்பிரதேசத்திலும் எண்ணெய் வள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் ஆஸ்திரேலிய நிறுவனமான 'நியூ சவுத் குளோபல் லிமிட்டெட்' என்ற நிறுவனம் இந்த எண்ணெய் வள ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

முன்னரும் பல வெளிநாட்டு நிறுவனங்கள் மன்னார் கடற்பிரதேசத்தில் மசகு எண்ணெய் வள ஆய்வை மேற்கொள்ளத் திட்டமிட்டு நடவடிக்கை எடுத்தபோதிலும் அந்த நடவடிக்கைகள் பலதரப்பட்ட காரணங்களினால் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன.

கடந்த மாதம் எண்ணெய் வள கண்டுபிடிப்புக்கான ஆய்வுகள் ஆரம்பமாகின்றன என்றும்-

அடுத்த சில மாதங்களில் ஆய்வு பூர்த்தி அடையும் என்றும்-

ஆசிய அபிவிருத்தி வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாய்வுகள் தொடர்பான கண்டுபிடிபுகள் அறிக்கை வடிவில் இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்படும்.

ஆய்வு வேலை அனேகமாக இவ்வருடம் ஜூன் மாதமளவில் பூர்த்தி அடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாய்வு வேலைத்திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 3 லட்சத்து 25 ஆயிரம் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## பிரயாண விண்ணப்பப் படிவம்

வலிகாமம் தெற்கு,மார்ச்1

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய விரும்பும் வலிகாமம் தெற்கு பிரதேச மக்கள், வெளியிடங்களுக்கு செல்வதற்கான பயண அனுமதி விண்ணப்பப் படிவங்களை வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என பிரதேச செயலக நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.

பிரயாண அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்கள் பெற்றுக் கொள்வதில் இருந்த கஷ்ட நிலையை போக்கும் முகமாகவும் எளிதாகப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியாகவும் பிரதேச செயலகத்தால் விண்ணப்பப் படிவம் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-152)

## சேவைக்கால பயிற்சி வகுப்பு

வலிகாமம் தெற்கு,மார்ச்1

வலிகாமம் கல்வி வலயத்தில் சிங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை கோட்டங்களில் உள்ள பாடசாலைகளில் தரம் 8,11 வகுப்புகளில் சமூகக்கல்வியும் வரலாறும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்புகள் நாளை முதல் மூன்று தினங்கள் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளன. (உ-152)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

வடமராட்சி,மார்ச்1

அல்வாய், மாயக்கை, நாவலர் சந்தி, ஸ்ரீலங்கா பாடசாலைச் சுற்றாடல், நக்கீரன் வீதிச் சுற்றாடல், பழவத்தை, வியாபாரிமூலை, சாளம்பை ஆகிய பகுதிகளில் எதிர்வரும் 8ஆம் திகதி வியாழக்கிழமை கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்படவுள்ளன.

பருத்தித்துறை பிரதேச சபையால் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-173)

## இந்துக் குருமாரின் பிரதிநிதி

வலிகாமம் தெற்கு,மார்ச்1

சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத்தின் வெளி விவகாரங்களுக்குப் பொறுப்பாகவும், ஒன்றியத்தின் பிரதிநிதியாகவும் வடமராட்சி ஒன்றியக்கிளை செயலாளர் சிவப்பிரம்மஸ்ரீ.ராம்.கெங்காதரக் குருக்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்து மத குருமார்களில் நலன்களைக் கவனிக்கும் நோக்குடன் இவர் லண்டன் மாநகருக்குச் செல்லவுள்ளார். (உ-152)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

வடமராட்சி,மார்ச்1

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் 'திருமந்திரம்' எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் சபா.அருந்தவநாதன் வழங்குவார். (உ-173)

## 4 கோடி ரூபா பெறுமதியான கருவிகள் யாழ். ஆஸ்பத்திரிக்கு

### அமெரிக்கத் தூதுவர் வழங்குவார்

லண்டன், மார்ச்1

கொழும்பில் உள்ள அமெரிக்கத தூதரகத்தினால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சுமார் நான்கு கோடி ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இரண்டு நாள்கள் விஜயத்தை மேற்கொண்டு மார்ச் மாதம் 6 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அவற்றை வழங்குவார்.

அவர் யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் யாழ்.பொது நூலகம் ஆகியவற்றுக்கும் விஜயம் செய்வார். அத்துடன் கல்வியாளர்கள், மதத் தலைவர்கள் உட்பட சுமார் நூறு பேர் கலந்து கொள்ளும் ஒரு சந்திப்பில் இலங்கையின் இனப்பிரச்சினை குறித்தும் அவர் கலந்துரையாடுவார். (உ-10)

## வவுனியா ஆசிக்குளம் பகுதியில் வெள்ளை வானில் கடத்தப்பட்டோர் படை முகாமில் தடுப்புக் காவலில்!

வவுனியா,மாாச்1

வவுனியா ஆசிக்குளம் பகுதியில் கடந்த ஞாயிறு, திங்கட்கிழமைகளில் மூன்று தமிழ் இளைஞர்கள் வெள்ளை வானில் வந்த இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த விஜியரத்தினம் ரஜனிகாந்த் (வயது 23), செல்வநாயகம் விமலகாந்தன் (வயது 25) ஆகியோர் ஞாயிற்றுக் கிழமையும் -

புவனேஸ்வரன் பொன்கரன் (வயது 22) என்பவர் திங்கட் கிழமையும் - கடத்தப்பட்டுள்ளதாக அந்த முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடத்தல் சம்பவங்கள் சம்பந்தமாக மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் படையினரிடம் தொடர்பு கொண்டனர்.

பிரஸ்தாப நபர்கள் வவுனியாவில் உள்ள 21ஆவது படைப்பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக படைத்தரப்பு தகவல் தந்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் உறவினர்களுக்கு தகவல் கொடுத்துள்ளனர். (உ-3)

## அறிவுறுத்தல் செயலமர்வு

வலிகாமம் தெற்கு,மார்ச்1

வலிகாமம் கல்வி வலயப் பாட மேம்பாட்டு செயற்றிட்ட அறிவுறுத்தல் செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரிய நிலையத்தில் நடைபெற உள்ளது.

ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் விஞ்ஞானம் கற்கும் ஓர் ஆசிரியரை இச் செயலமர்வில் கலந்து கொள்ள அனுப்பி வைக்குமாறு வலிகாமம் வலய கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார். (உ-152)

## வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் காலங் கடந்த பிறப்புக்களை பதிவதற்கு புதிய செயற்றிட்டம்

மூளாய்,மார்ச்1

வலிகாமம்மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் காலம் கடந்த பிறப்புப் பதிவுகளை மேற்கொள்வதற்கு வசதியாக 'அந்த இடத்தில் சேவை' என்ற புதிய செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ்.செயலரும், வலி.மேற்க் குப் பிரதேச செயலகமும் இணைந்து மேற்கொள்ளும் இச்சேவை நடமாடும் சேவையை ஒத்ததாக அமையும்.

இச் சேவையின் போது அதிகாரிகள்குழு பொதுமக்கள் கூடும் இடத்திற்கு நேரடியாகச் சென்று சேவையை வழங்கும்.

குறிப்பாக பிறப்பு பதியாத மாணவர்களை அதிகம் கொண்டதாக அடையாளம் காணப்பட்ட பாடசாலைகளுக்குச் செல்லும் அதிகாரிகள் குழுவினர், அந்த இடத்தில் வைத்தே தேவையான படிவங்களை விநியோகித்து உடனடியாகவே தேவையான ஆவணங்களைத் தயாரித்துக் கொள்வர் என்றும்-

பின்பு உரிய விசாரணைகளின் பின்னர் பிறப்புப் பதிவு மேற்கொள்ளப்பட்டு பிறப்புச் சான் றிதழ்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இம்மாதம் நடுப்பகுதி அளவில் இப்புதிய சேவை தொடர்பான செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும்-

இதனால் இதுவரை பிறப்புப் பதியாமல் உள்ள மாணவர்கள் பலர் நன்மையடைவார்கள் என்றும்-தெரிவிக்கப்பட்டது. (உ-99)

## பெண் மீது தாக்குதல்

தென்மராட்சி, மார்ச்1

மீன் கொள்வனவு செய்வதற்காகச் சென்ற பெண் வியாபாரி இடைவழியில் மறிக்கப்பட்டு பொல்லுகள், வாள் ஆகியவற்றால் தாக்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் காலை துன்னாலை வேம்படியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த நடேசன் கமலா (வயது 47) என்பவரே காயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-117)

## காலநடை வைத்தியப் பணிமனைக்கு வட்டுக்கோட்டையில் புதிய கட்டடம்

வட்டுக்கோட்டையில் கால் நடை வைத்திய அதிகாரி பணிமனைக்கென புதிய கட்டடம் ஒன்று அமைகக்கப்படவுள்ளது.

நீண்ட காலமாக மேற்படி பணிமனை நிரந்தர கட்டடம் எதுவுமின்றி தனியார் கட்டடங்களிலேயே இயங்கி வந்தது. இக் குறைபாட்டை நீக்கும் வகையிலேயே புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

வட்டுக்கோட்டை மாவடிச் சந்திக்கண்மையில் இக்கட்டடத்தை அமைப்பதற்குத் தேவையான காணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை இக்கட்டடத்தை அமைப்பதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மிக விரைவில் கட்ட வேலைகள் ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ-99)

## வலி. மேற்குப் பகுதியில் கோழிக்குஞ்சு விநியோகம்

மூளாய்,மார்ச்1

வலிகாமம் மேற்குப் பகுதிகளில் உள்ள கோழிப் பண்ணையாளர்களுக்கு கோழிக்குஞ்சுகளை விநியோகிப்பதற்கு விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாத நடுப்பகுதிமுதல் மேற்படி பகுதிகளில் உள்ள கோழி வளர்க்கும் பண்ணையாளர்களுக்கு தொடர்ச்சியான கோழிக்குஞ்சு விநியோகத்தை மேற்கொள்ளுவதற்கு வசதியாகவே மேற்படி விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரி மேற்கொண்டு வருகிறார்.

கோழி வளர்ப்பில் ஆர்வமுள்ள பண்ணையாளர்கள் கோழிக்குஞ்சுகளைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் வட்டுக்கோட்டையிலுள்ள கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் பெயர்பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பதிவு செய்து கொள்ளும் பண்ணையாளர்களுக்கு இம்மாத நடுப்பகுதியளவில் நல்ல இன கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்பட உள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-99)

## கட்டணத்தைச் செலுத்தாததால் அராலிக்கான குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்படும்

மூளாய்,மார்ச்1

அராலி, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிதண்ணீர் விநியோகம் இடைநிறுத்தப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

இப்பகுதிகளில் உள்ள குடிதண்ணீர் பாவனையாளர்கள் தமது கட்டணங்களை கடந்த ஒரு வருடத்துக்கும் அதிகமாகச் செலுத்தவில்லை. இதனால் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினால் இப்பகுதிகளுக்கு தண்ணீர் விநியோகத்தை தொடர்ந்தும் மேற்கொள்ள முடியாமல் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

பாவனையாளர்களிடமிருந்து நிலுவையாக உள்ள பணத்தை அறவிடுவதற்கு இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்துள்ளன. தேசிய நீர் வழங்கல், வடிகால் அமைப்புச் சபையிடமும் நிதி வளம் குறைவாக உள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் குடிதண்ணீர் விநியோகத்தை இடைநிறுத்தம் செய்வது தவிர்க்க முடியாததாகிவிடும் என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-99)

# வெடிப்பொருள்கள் அகற்றப்பட்ட பின்பே தென்மராட்சியில் வேலைத்திட்டங்கள்!

## சர்வதேச தொண்டர் அமைப்புப் பிரதிநிதிகள் கூறுகின்றனர்

தென்மராட்சி,மார்ச்1

''தென்மராட்சிப் பகுதியில் புதைககப்பட்டுள்ள வெடிப்பொருள்கள் அகற்றப் பட்ட பின்னரே அங்கு எமது வேலைத் திட்டங்களைப் படிப்படியாக ஆரம்பிக்க முடியும்.''

யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் சர்வதேசத் தொண்டர் அமைப்புக் களின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சிப் பகுதியில் மீளக் குடியமரும் மக்களுக்கு தேவையான உதவிகளை சர்வதேச தொண்டர் அமைப்புக்களிடம் இருந்து பெறுவது பற்றி ஆராய்வதற்காக நேற்று முன் தினம் கூட்டப்பட்ட கூட்டத்திலேயே அவர்கள் இப்படிக் கருத்து வெளி யிட்டனர்.

வடக்கு அபிவிருத்தி புனர் வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அவரது யாழ்.அலுவலகத்தில் கூட் டப்பட்ட இந்தக் கூட்டத்தில் ஐ.நா. அபிவிருத்தித் திட்டம், அகதிகளுக் கான ஐ.நா.தூதரகம், கெயர், போரூட், பட்டினிக்கு எதிரான நிறுவனம், யுனிசெவ் ஆகியவற்றின் பிரதிநிதி கள் பங்கு கொண்டனர்.

தென்மராட்சிப் பகுதியை மீளக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான உதவிகளை வழங்க முடியும் எனத் தெரிவித்த அந்த அமைப்புக்களின் பிரதிநிதிகள்-

முதலில் மக்கள் பாதுகாப்பாக நடமாடக் கூடிய நிலையை ஏற் படுத்த வேண்டும்; அதற்கு அங்கு புதைத்து வைக்கப்பட்டுள்ள வெடிப் பொருள்கள் அகற்றப்பட வேண்டும் - என்று தெரிவித்தனர்.

வெடிப்பொருள்கள் அகற்றப்பட்ட பின்னர் தமது பணிகளைப் படிப்படி யாக அங்கு ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அவர்கள் உறுதி அளித் தனர். (உ-3-5)

## கைதடிப் பிரதேசத்தில் மீளக் குடியமரும் மக்களை பாதிக்கும் தோல் நமைச்சல்

யாழ்ப்பாணம்,மார்ச்1

கைதடிப் பிரதேசத்தில் சில பகு திகளில் மீளக் குடியமர்ந்த மக்கள் ஒருவகைத் தோல் நமைச்சலுக்கு (கடிக்கு) உள்ளாவதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

அந்தப் பகுதியில் வீசும் துர்நாற் றம் கலந்த காற்று உடலில் பட்ட வுடன் சொறிவு ஏற்படுவதாகவும் -

இந்தப் பாதிப்புக்குள்ளான பலர் சிகிச்சை கூடப் பெற்றுள்ளனர் என் றும் -

பொதுமக்கள் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் இடம்பெற்ற குண்டுவீச்சு மற்றும் ஷெல் வீச்சுக் களால் சேதமடைந்த கட்டடங்கள் மற்றும் வளவுகளைத் துப்புரவு செய்து அந்தக் குப்பை கூளங்களைத் தீவைத்துக் கொளுத்துவதால் ஏற் படும் புகை மூட்டமே இதற்குக் காரணம் எனப் பலர் கருத்துத் தெரி வித்தனர். (உ-3)

# சமாதானப் பேச்சுக்கு முன்னோடியாக முதலில் சகஜ வாழ்வை உருவாக்குங்கள்!

## சொல்ஹெய்முக்கு கிளிநொச்சி மாணவர்கள் மகஜர்

வவுனியா,மார்ச்1

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங் கத்துக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறுவதற்கு முன் னோடியாக மக்களுக்கு நம்பிக்கை யூட்டும் விதத்தில் தமிழ் மக்களின் சகஜமான வாழ்க்கையை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முன்முயற்சிகளில் ஈடு பட்டுள்ள நோர்வே விசேட தூதர் எரிக் சொல்ஹெய்மிடம் மேற்கண்டவாறு கிளிநொச்சி உயர்தர வகுப்பு மாண வர் ஒன்றியம் மற்றும் அப்பகுதி பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ் வுக்கு ஆதரவாக நேற்றுமுன்தினம் கிளிநொச்சி வட்டக்கச்சியில் நடத் தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியை அடுத்து, இந்த மகஜர் அனுப்பி வைக் கப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:-

இலங்கை அரசின் பேரினவாத செயற்பாட்டால் தமிழ் மக்களாகிய நாம் தொடர்ந்து அல்லற்பட்டு வரு கின்றோம். இந்த நிலையில் தாங் கள் சமாதானத்தினைக் காண்பதற் காக அல்லும் பகலும் அயராது எடுத்துவரும் முன்முயற்சிகள் குறித்து பாராட்டுதல்களைத் தெரிவிப்பதோடு, தமிழ் மக்கள் அனைவரினதும் அபி லாசைகளை வெளிப்படுத்தும் முக மாக இந்த மனுவை தங்களின் மேலான கவனத்திற்குத் தருகின் றோம்.

வரலாற்று ரீதியாக சிறிலங்கா பேரினவாத அரசுகள் தமது மேலா திக்க நடவடிக்கைகளினால் எம்மை அடக்கி அல்லற்பட வைத்துள்ளன. இதனால் தமிழ் மக்களாகிய நாம் சொல்லொண்ணாத் துன்பங்களி னால் அவலப்பட்டுள்ளோம். தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் விடுதலைப் புலிகள் அமைப்பினர் கடந்த 2 மாதங்களுக்கு மேலாக 3ஆவது முறையாகவும் ஒரு தலைப் பட்சமான போர் நிறுத்தத்தைச் செய்து, சமாதானத்தினைக் காண வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளனர். ஆனால் சிறிலங்கா அரசானது இந்த யுத்த நிறுத்தத்தை ஏற்காமல் நிரா கரித்துள்ளது; போர் நடவடிக்கை யினைத் தொடர்வதும் போருக்கான முன்தயாரிப்புகளிலும் ஈடுபடுவது மாக உள்ளது. இது வேதனைக் குரிய விடயமாகும்.

சமாதானத்திற்கான யுத்தம் என்று சொல்லிக்கொள்ளும் சிறி லங்கா அரசின் கோட்பாடு ஆயுத வன்முறை ரீதியாக - அதாவது போர் மூலமான நடவடிக்கையாக-உள்ளது என்பதே வெளிப்படுகின்றது. தமிழ் மக்களின் அபிலா சைகளை நிறைவு செய்கின்ற ஒரு தேசிய இனத்திற்கே உரித்தான சுயநிர்ணய உரிமை அடிப்படையி லான, சுதந்திரமான, கௌரவம்மிக்க வாழ்க்கையை உறுதி செய்யும் நட வடிக்கைகளை நாம் வரவேற்கின்றோம்.

இதற்காக சர்வதேச சமூகமும் நோர்வே அரசாங்கமும் தாங்களும் முன்னெடுக்கும் நீடித்த சமாதான முயற்சிகள் வெற்றி பெற வேண்டும் என்பதில் நாம் மிகவும் அக்கறை கொண்டுள்ளோம். இங்கு சமாதானப் பேச்சுக்களுக்கு நம்பிக்கை ஊட்டு வதற்காக - தமிழ் மக்களின் சகஜ மான வாழ்க்கையை உருவாக்குவதற் காக - நடவடிக்கையை எடுக்க வேண்டும். எனவே இன்னலுறும் தமிழ் மக்களினது சார்பில், போர் முன்முயற்சிகளை நிறுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக் களை ஆரம்பித்து, நிரந்தரமான சமாதானத்துக்கான அனைத்து முயற்சிகளையும் முன்னெடுப்பதற் கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து, எமது சுபீட்சமான - கௌர வம்மிக்க - வாழ்வினைப் பெற வழிச மைக்க வேண்டும் எனத் தங்களை கேட்டுக்கொள்கிறோம்-

இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (உ-3)

# கைதடிச் சந்திக்குச் செல்ல இன்னும் அனுமதி இல்லை

யாழ்ப்பாணம்,மார்ச்1

கைதடிப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள போதும் கைதடிச் சந்திக்கு மக்கள் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட வில்லை என்று கைதடி வணிகர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கைதடி மீளக்குடியமர்வு தொடர் பாக அமைச்சர் நடத்திய கலந்துரை யாடல் ஒன்றிலேயே இவ்வாறு தெரி விக்கப்பட்டது.

கைதடிச் சந்தி தடை செய்யப்பட்ட ஒரு பிரதேசமாக இருப்பதுடன் அங் கிருக்கும் வர்த்தக நிறுவனங்களில் இருந்து சீற்றுகள், கூரைகள், கதவு கள், யன்னல்கள் போன்றன அங்குள்ள படையினரால் கழற்றப்பட்டு வருகின்றன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட இராணுவ அதிகாரி ஒருவர் இதற்கு பதிலளிக்கையில் கூறிய தாவது:-

பொதுமக்களின் பாதுகாப்புக் கருதியே அந்தப் பிரதேசம் தடைசெய் யப்பட்டது.

வர்த்தக நிறுவனங்களில் இருந்து பொருள்கள் எதுவும் எடுக்க வேண் டாம் என்று படையினருக்கு உத்தர விடப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் இனி மேல் நடைபெறாதிருக்க உறுதியளிக் கிறேன் - என்று கூறினார். (உ-5)

# மலையகத் தோட்டத் தொழிலாளரின் போராட்டத்துக்கு வரதர் அணி ஆதரவு

கொழும்பு,மார்ச்1

மலையகத் தோட்டத் தொழிலா ளர்களின் சம்பள உயர்வுக்கு அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண் டும் என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) கோரியுள்ளது.

தோட்டத் தொழிலாளர்கள் சம் பள உயர்வைக் கோரி ஹற்றனில் நடத்திவரும் சத்தியாக்கிரகப் போராட் டத்தை ஆதரித்து ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) விடுத்துள்ள அறிக் கையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்த அறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:-

தோட்டத் தொழிலாளர்களின் 400 ரூபா சம்பள உயர்வுக் கோரிக் கைப் போராட்டத்துக்கு நாம் பூரண ஆதரவை வழங்குகின்றோம்.

விலைவாசிகள் விசம் போல் ஏறி யுள்ள நிலையில் தனியார் துறை, பொதுத்துறை, ஓய்வூதியக்காரர்கள் எனப் பல்வேறு தரப்பினருக்கும் சம் பள உயர்வு வழங்கப்பட்டிருக்கையில் மலையகப் பெருந்தோட்டத் தொழி லாளர்களுக்கும் சம்பள உயர்வு வழங் கப்படுதல்வேண்டும். இதில் சிக்கல் கள் உள்ளன என காரணங்கள் கூறிக் காலத்தைக் கடத்துவது நீதி நியாய மற்ற நடவடிக்கையாகும்.

இந்தக் கணம்வரை இலங்கைக் கான உண்மையான அந்நியச் செலா வணி வருமானத்தில் 50 சதவீத வரு மானத்தை ஈட்டித் தருபவர்கள் மலை யகப் பெருந்தோட்டத் தொழிலாளர் களே.

ஆனால் மின்சாரம், சுகாதாரம், குடிதண்ணீர், போக்குவரத்து, வீட மைப்புப் போன்ற உள்ளகக் கட்ட மைப்பு வசதிகளில் மிகவும் பின்தங் கிய நிலையைக் கொண்டிருப்பவர் களும் அவர்களே ஆவர்.

அவர்களது கோரிக்கை முதலாளி மார் சம்மேளனத்துக்கும் தொழிலா ளர்களுக்கும் இடையேயுள்ள தனிப் பட்ட விவகாரம் என்பதாக அரசு பாராமுகமாக இருக்க முடியாது.

தொழிலாளர்களின் சத்தியாக் கிரகப் போராட்டத்தில் - கட்சி, தொழிற்சங்க வேறுபாடுகளுக்கு அப் பால் - அனைத்துத் தொழிலாளர் சக்திகளும் ஒன்றுபட்டிருப்பது பிரச் சினையின் நியாயத் தன்மையை துலாம்பரமாக எடுத்துக்காட்டுகின் றது.

காலம் தாழ்த்தாது மலையகத் தொழிலாளர்களின் சம்பள உயர் வுக்கு அரசு உடனடி நடடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் - என்று உள்ளது. (உ-3)

## உடைமைகளை உரியவர்களிடம் வழங்குவதில் சிக்கல்

யாழ்ப்பாணம்,மார்ச்1

கைதடிப் பகுதியில் படையினரால் கைப்பற்றப்பட்ட பொருள்கள் உரிய ஆவணங்கள் இல்லாமையினால் உரி மையாளர்களிடம் ஒப்படைப்பதில் சிக் கல் இருப்பதாக இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

இவ்வாறு படையினரிடம் இருக் கும் தமது பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்குப் பொதுமக்கள் சத்தியக் கடதாசியுடன் கிராம அலுவலர்கள் மூலம் தொடர்புகொள்ளலாம் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

மோட்டார் சைக்கிள் போன்ற பெறுமதியான வாகனங்களுக்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண் டும் என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (உ-5)

## ஆசிக்குளத்தில் தேடுதல்

வவுனியா,மார்ச்1

வவுனியா ஆசிக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சுற்றி வளைப்புத் தேடுதலின்போது ஒன்பது பேர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டனர்.

அந்தப் பகுதியில் அன்றைய தினம் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது இனந்தெரியாதவர் கள் கிரனைட் ஒன்றை வீசியதன் எதிரொலியாகவே இந்தச் சுற்றி வளைப்பு இடம்பெற்றதாகக் கூறப் பட்டது. (உ-3)

# ஊர்காவற்றுறைக் களஞ்சியம் செவ்வாயன்று திறந்துவைப்பு

புனரமைக்கப்பட்ட ஊர்காவற் றுறை உணவுக் களஞ்சியம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற் பகல் 1 மணியளவில் வைபவ ரீதி யாக திறந்துவைக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை உதவி அர சாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வ நாயகம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் எஸ்.சிவதாஸன், யாழ்.அரச அதி பர் கே.சண்முகநாதன் ஆகியோர் நாடாவை வெட்டி உணவுக் களஞ் சியத்தைத் திறந்துவைத்தனர்.

யாழ்.செயலகத் திட்டப் பணிப் பாளர் எஸ்.மகாலிங்கம், பிரதித் திட் டமிடல் பணிப்பாளர் கே.பாலகிருஷ் ணன், உதவித் திட்டமிடல் பணிப் பாளர் வே.சாம்பசிவம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊர் காவற்றுறை பிரதேசசபைத் தலை வருமான ந.மதனராஜா ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையினால் வழங்கப்பட்ட 20 லட்சம் ரூபா நிதி மூலம் புனரமைப் புச் செய்யப்பட்ட இந்த உணவுக் களஞ்சியத்தில் அனைத்துத் தீவுப் பகுதிகளுக்குமான உணவுப் பொருள் கள் களஞ்சியப்படுத்தப்பட உள்ளன. (உ-16-7.3)

# தன்னை மறுத்தல்

*"என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" யேசு (லூக் 9: 23)*

*தவக்காலம் ஒப்புரவின் காலம்; மனமாற்றத்தின் காலம். இறைமகன் யேசுவின் பாடுகளில் பங்கேற்கும் காலம். நாம் அவரது பாடுகளில் பங்கேற்க அவர் தரும் அழைப்புக்குரிய மக்களாக எமைத் தயார்செய்ய இன்று பணிக்கப்படுகின்றோம். யேசுவின் சீடராய் நாம் வாழ பின்வரும் மூன்று பண்புகளை ஒன்றாய்க் கடைப்பிடிக்க வேண்டும்.*

### இன்று 2 ஆம் நாள்


1. தன்னை மறுக்க வேண்டும். அதாவது 'யான்' 'எனது' என்னும் ஆண வத்தை அழித்து தன்னைத் தகனப் பலியாக்க வேண்டும்.
2. தன் சிலுவையைச் சுமக்க வேண்டும். யேசுவைப் போல் சிலுவையை ஏற்று இறைவனுக்காகத் தன்னை முழுவதும் அர்ப்பணிக்க வேண்டும்.
3. யேசுவைக் கண்டு பாலிக்க வேண்டும். வாழ்நாள் முழுவதும் யேசுவின் பாதையில் பின்செல்ல வேண்டும்.

*இறைமகன் யேசுவை நாம் பின்செல்லத் தடையாய் இருக்கும் இவ் உலக மாயைகளைத் தியாகம் செய்திடுவோம். தவக் காலத்தில் யேசுவின் சிலுவை சுமக்கும் பங்காளராக எமது அயலவர் துன்பத்தில் உதவிக் கரம் நீட்டி மனமாற்றம் பெற்ற மக்களாகத் துன்ப துயர்களை இன்முகத்துடன் ஏற்றிடுவோம். என்றும் அழியாத செல்வமாகிய பேரின்ப வாழ்வைப் பெற்று உய்த்திடுவோம்.*

**தவக்காலச் சிந்தனை**

**எஸ்.ஜீ.றூபவசந்தினி**

# சாயி சிந்தனை



ஒருவர் செல்வத்தையும் சம்பாதிக்க வேண்டும். ஆனால் செல்வத் தைச் சேர்ப்பதும் ஓர் எல்லைக்குள் இருக்க வேண்டும். உங்களுடைய திறமைகளும் சமூகத்துக்குக் கிடைக்க வேண்டும், அப்போதுதான் உங் கள் நாடு முன்னேறும். இன்று உலகம் எங்கும் நிலவும் அமைதியின்மை

### கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே

பற்றி நீங்கள் நன்கு அறிவீர்கள். நீங்கள் எங்கு திரும்பினாலும் பயமும், திகிலும் உங்களை எதிர்கொள்ளுகின்றது. இந்த நிலைமையைச் சரி செய்வது இளைஞர்களுடைய கடமையாகும். முதன் முதலில் உங்கள் பெற்றோருக்கு சேவை செய்யுங்கள். பின்பு உங்கள் குடும்பத்தைக் கவனியுங்கள், உங்கள் சமூகத்துக்கு சேவை செய்யுங்கள். பிறகு உங்கள் நாட்டுக்கு சேவை செய்ய ஈடுபடமுடியும். ஆனால் உங்கள் முயற்சிகளின் பலனை எதிர் நோக்கியிருக்காதீர்கள். உங்கள் செயல்களுக்கு கடவுளால் பரிசு தரப்படும்.

**(சனாதன சாரதி - பெப்.2000)**

# திரிபோஷா உற்பத்தித் தொழிற்சாலை யாழ்ப்பாணத்தில் அமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்1

யாழ்ப்பாணத்தில் திரிபோஷா உற்பத்தி தொழிற்சாலை ஒன்று வடக்கு மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையினால் அமைக்கப்படவுள்ளது என்று சபையின் தலைவர் என்.வாமதேவா உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது :-

இந்த திட்டத்துக்காக 50 லட்சம் ரூபா சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் திரிபோஷா யாழ்ப்பாணத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் போஷாக்கு குறைந்த சிறுவர்களுக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் வழங்கப்படும்.

யாழ் மாவட்டத்துக்கு ஒவ்வொரு மாதமும் தேவையான திரிபோஷாவை கொழும்பில் இருந்து கப்பலில் கொண்டு வருவதற்கு 4 லட்சம் ரூபா செலவு செய்ய வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இந்த உற்பத்தியை மேற்கொள்வதனால் இத்தகைய மேலதிக செலவைக் குறைக்க முடியும்.

தென்மராட்சி மக்களின் மீளக் குடியமர்வுக்கு விசேட திட்டங்களை மேற்கொள்ள வேண்டிய நிலையிலுள்ளோம். இது தொடர்பாக அமைச்சு மட்டத்தில் ஆராயப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்டத்தில் பாடசாலைக்கு செல்லாது இருக்கும் இளைஞர்களில் தொகுதி தோறும் 100 இளைஞர்களை தெரிவு செய்து அவர்களுக்கு அபிவிருத்தி தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு மாதாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகை வேதனமும் வழங்கப்படவுள்ளது.

கடந்த கால வன்செயல்களினால அழிந்து போன-யாழ்ப்பாணத்திலுள்ள-கைத்தொழில் நிலையங்களில் முதலகட்டமாக 45 தொழிற்சாலைகளுக்கு கடனுதவிகள் வழங்கப்படவுள்ளன.

இத் திட்டம் தொடர்பாக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்ற பின்னர் ஒரு தொழிற்சாலைக்கு 50 லட்சம் ரூபா வீதம் கடன் வழங்கப்படும். இக்கடன் மூன்று வருடங்களின் பின்னர் 9 வீத வட்டியுடன் மட்டும் அறவிடப்படும்.

விவசாயம், கால்நடை, போக்குவரத்து, கல்வி, ஆலயங்கள், சுகாதாரம், வீடமைப்பு, நீர்ப்பாசனம், போன்ற துறைகளின் அபிவிருத்திக்கு இந்த வருடமும் சபையினால் பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது-என்றார். (உ-5)

## மன்னாரில் 13 பேர் காவலில் !

மன்னார்,மார்ச்1

மன்னாரில் உள்ள கிளர்ச்சித் தடுப்புப் பொலீஸாரின் தடுப்பு முகாமில் 13 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு வவுனியா அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்த முகாமுக்குச் சென்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலக அதிகாரிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் நலன்களைக் கேட்டறிந்தனர். (உ-3)

## நிவாரணம் அடுத்த வாரம்

தென்மராட்சி, மார்ச்1

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான பெப்ரவரி மாத நிவாரண உலர் உணவுப் பொருள்கள் அடுத்த வார நடுப்பகுதியில் வழங்கப்படவுள்ளன.

நிவாரணப் பொருள்கள் பெற்றுக் கொள்வதற்கான வழங்கற் கட்டளைகள் அந்தந்த பிரதேச நிலையங்களால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருவதாக தெரிய வருகிறது. (உ-3-117)

## டிக்கோயாவில் 6 தமிழர் கைது

கொழும்பு,மார்ச்1

இலங்கைத் தோட்டத் தொழிலாளா சங்கத்தின் உறுப்பினர்கள் தற்போது மேற்கொண்டு வரும் உண்ணாவிரதப் போராட்டத்துக்குச் சென்ற 6 தமிழ் இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பில் இருந்து அங்கு சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த வேளையில் இவர்கள் டிக்கோயாவில் வைத்துக் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## வல்லுறவு

கொழும்பு,மார்ச்.1

பாணந்துறை கடற்கரைப் பகுதியில் வைத்து 18 வயதுடைய இளம் யுவதி ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

பஸ்ஸுக்காகக் காத்து நின்ற இந்தப் பெண்ணை இலக்கத் தகடு இல்லாத வானில் வந்தவர் மூவர் கடத்திச் சென்று வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளதாக பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-10)

## கடதாசி ஆலை மீண்டும் இயங்குகின்றது

யாழ்ப்பாணம்,மார்ச்1

ஒரு வருடகால இடைவெளிக்குப் பின் எம்பிலிப்பிட்டிய கடதாசி ஆலை மீண்டும் இன்று திறக்கப்படவுள்ளது.

வைக்கோல் பாவனை தொடர்பாக ஏற்பட்ட சுற்றாடல் பிரச்சினையால் கடந்த ஆண்டில் மூடப்பட்ட இந்த ஆலை இன்று முதலாம் திகதி மீண்டும் திறக்கப்படவுள்ளது. (உ-10)

## சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு

தென்மராட்சி,மார்ச்1

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் எதிர்வரும் ஐந்தாம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் பகல் 12.30 மணி வரை விண்ணப்பத்தில் கையொப்பம் இடுவதற்காகத் தமது பெற்றோருடன் கரவெட்டி, கொடிகாமம் வீதியில் உள்ள 'ரலன்ற்' கல்வி நிலையத்தில் இயங்கும் கல்லூரிக்கு வருகை தருமாறு அதிபர் திருமதி கி.சிவநாதன் கேட்டுள்ளார். (ஓ-31-117)

---

# ஆறாம் மாத நினைவஞ்சலி



மலர்வு 26 - 07 - 1977

மறைவு 04 - 09 - 2000

**செல்வி நடராசா நுதர்சினி (தர்சா)**

(தொண்டர் ஆசிரியர், கைதடி குருசாமி மகா வித்தியாலயம்)

திதி: ஷஷ்டி - 01-03-2001

பார்தனில் பிறப்பவர் எல்லோரும் இறப்பது நியதி.
எனினும் பாசத்தின் சுமையோடு பறந்து சென்ற
என் மகளே!
உன்னை நினைந்ததும் இருவிழிகளும் சிந்தும் நீர் ஆறாகப்
பாயுது மகளே!
உன் அண்ணனையும் தம்பியையும் அம்மாவையும் தவிக்கவிட்டு
எங்கு சென்றாயோ?
உன் இனத்தவர் யாவரையும் சோகத்தில் ஆழ்த்தி விட்டு
மாதம் ஆறு சென்றாலும் உன் நினைவு மனதை வாட்டி
வதைக்கிறது மகளே!

*உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல*
*கையிற்றிசிட்டி கந்தனை வேண்டுகிறேன்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணன், தம்பி,
உற்றார், உறவினர்.

தகவல்
சி. நடராசா (அப்பா)
*அரசினர் வைத்தியசாலை,*
*அச்சுவேலி.*

நிரந்தர முகவரி:
*கைதடி வடக்கு,*
*கைதடி.*

(84736)

---

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு 25 - 03 - 1978

அநியாய அழிப்பு 24 - 02 - 1996

**செல்வன் கந்தையா இராஜேஸ்வரன்**

(A/L - 97 கலைப்பிரிவு மாணவன்)

திதி: 01-03-2001

பாசத்தின் சுமையோடு பறந்து சென்ற ராசாவே!
இரு விழி சிந்திய நீர்த்துளி இன்றும் காயவில்லை ராசாவே!
அதற்குள்ளா ஐந்தாண்டு ஆனதடா!
விழி எல்லாம் நீர்தேங்கி நிற்கிறதடா ராசாவே!

-கந்தையா குடும்பத்தினர்-

*சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.* (84656)

---

பழைய மாணவர் சங்கம்

**யா/விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி**

**வருடாந்தப் பொதுக்கூட்டம்**

**இடம்: கல்லூரி மண்டபம்**

காலம்: 11.03.2001 (ஞாயிறு) மு.ப.9.30 மணி (SLT)

1. பிரேரணைகள் இருப்பின் 07.03.2001 ஆம் திகதிக்கு முன் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.
2. புதிய அங்கத்தவர்களாக சேர்பவர்கள் அன்றி புதுப்பிப்பவர்கள் 11.03.2001 ஆம் திகதிக்கு முன் பொருளாளரிடம் தொடர்புறவும்.
3. அனைவரது வருகை தவறாது வேண்டப்படுகின்றது.

*நன்றி*

க.தணிகாசலம்
தலைவர்.

கி.ரவிகுமார்
செயலாளர்.

(C/15486)

---

# பிற்போடப்பட்டுள்ளது

**லாலா சோப் ஸ்தாபனத்தாரால் (28.02.2001) புதன்கிழமை அதிர்ஷ்டம் பார்க்கப்பட இருந்த அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் *25.03.2001 ஞாயிற்றுக் கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது* என்பதை சகலருக்கும் மிகவும் தாழ்மையுடன் அறியத்தருகின்றோம்.**

**- லாலா சோப் ஸ்தாபனத்தினர்.**

*அச்சுவேலி.* (C/15475)

---

உ
சாயிராம்

**பகவான்**

# ஸ்ரீ சாயிபாபா ஆத்மீக நூல்கள்



சுவாமி பாகம் I, II (ரா. கணபதி), பிரசாந்திவாஹினி, சூத்ரவாஹினி, வித்யாவாஹினி, அறிவு அறுபது, அற்புதம் அறுபது, தீராத விளையாட்டு, சாய சத்தியம் சிவம் சுந்தரம் பாகம் I, II, III, IV, பிருந்தாவனத்தில் கோடைமழை, 2000ஆம் ஆண்டு இறைவனோடு இனிய பயணம், பிருந்தாவனத்தில் பாபா சொன்ன பாகவதம், கர்மா, கலியுக அவதாரம், காயத்ரீ மற்றும் பல.

**கிடைக்கும் இடம்:**
"சாயி பாபா களஞ்சியம்",
கோயில் வீதி, நல்லூர்.

**திறந்திருக்கும் நேரம்:**
காலை 10 மணி முதல் 12.30 வரை.
மாலை 4 மணி முதல் 5.30 வரை. (84697)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 1959 - 07 - 21

ஆண்டவன் அடியில் 2001 - 01 - 30

**அமரர் வல்லிபுரம் சிவானந்தன்**

(வரணியூர் சிவா)

**நெஞ்சங்கள் கனக்கின்றதே!**


அருந்தவப் புதல்வனாய்
அன்புமிகு சகோதரனாய்
பாசமுள்ள கணவராய்
அறிவாற்றல் மிகு நற் தந்தையாய்
உறுதுணையான உறவினனாய்
உலகம் போற்றும் உத்தமனாய் - இருந்து
நீர் சென்ற தெங்கோ?
ஏங்குதே எம் இதயம்
உமது குரலோசை தனைக்கேட்டு
பொன்னாடை பல போர்த்தி
கௌரவித்தோர் எத்தனை பேர்?
எமைக் காண ஓடிவர இருக்கையிலே
எமன் உமைக் கவர்ந்தானோ?
துயரம் தனைத் தாங்காது - எம்
நெஞ்சங்கள் கனக்கின்றதே!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
-குடும்பத்தினர்.

*"தல்லையப்புலம்"*
*துன்னாலை தெற்கு,*
*கரவெட்டி.*

(84705)


உங்கள் பிள்ளைக்கு
இதமான
அரவணைப்பு
தனது பிள்ளைக்கு
சிறந்ததையே
தர விரும்பும்
ஒவ்வொரு
அன்னையரினதும்
ஒரே தெரிவு
பேபி ஷெரமி...
Baby Cheramy
Powder
Cream
Oil
Shampoo
Soap
பேபி ஷெரமி
(C/15498)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சிறந்த முறையில் பாவனையில் இருக்கும் **CANON 6016 PHOTO COPY** (போட்டோப் பிரதி) மெசின், அத்துடன் **VIDEO PROJECTOR 500** அங்குலம் **(30**அடி**)** திரை **SHARP** மெசின் விற்பனைக்குண்டு. எந்த நேரமும் பார்வையிடலாம். தொடர்பு: **S.K.** நல்லதம்பி, அச்சுவேலி. **T.P.**070-212223, 070-212678

(84631)

**"HONDA C-90 ECONO POWER"** நல்ல நிலையில் உள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.சண்முகநாதன், 75, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(84696)

மிகவும் நல்ல நிலையிலுள்ள **YAMAHA 50 NEWSMATE** மோட்டர் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. 4 மணிக்குப் பின் பார்வையிடலாம். தொடர்பு: இல.64, 2ஆம் குறுக்குத் வீதி, நல்லூர்.

(84726)

சாளி வகை மோட்டர் சைக்கிள் மற்றும் **S.R.38** டெக்கும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஈடன் ரேடர்ஸ், பங்சால் வீதி, சின்னக்கடை.

(84739)

நல்ல இன மரவள்ளிக் கட்டைகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சீனிவாசகம் சற்குணரட்ணம், இணுவில் தெற்கு, இணுவில்.

(84742)

## தேவை

**MS WORD, EXCEL,** கம்பியூட்டர் அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் மட்டும் விண்ணப்பிக்கவும். ஆங்கிலம்/ தமிழ், மொழி பெயர்ப்பும் தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது. தொடர்பு: சாருஜன், கொக்குவில் இந்துக் கல்லூரி முன்பாக. **T.P.2961.**

(84740)

கணக்கு எழுதுவதில் அனுபவமும் ரைப்பிங் செய்வதிலும், ரெலிபோன் இயக்குவதிலும் அனுபவமும் உள்ள பெண் லிகிதர் தேவை. விண்ணப்பங்கள் இல.1225, மே/பா. உதயன்.

(84741)

## தொலைபேசி தேவை

தொலைபேசி விற்க விரும்புவோர் உடன் எம்மிடம் விலை, விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: க.கேசவன், 182, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(84698)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய், ஆலடிச் சந்திக்கு அருகில் மெயின் றோட்டில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **K.**நடராசா, **VSK** மானிப்பாய்.(84702)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இருபிரதிகள் கட்டுவதற்கான *கட்டணம் ரூபா* **350/-)** தொடர்பு பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலை பேசி இல.3081. **(C/15377)**

## அபூர்வ ஜோதிடம்

கேரள சித்தர் ஏட்டு முறையில் தீராத பல நோய்களுக்கு அற்புத சிகிச்சை, காண்ட முறையில் எதிர் காலப் பலன்களை அறிதல். சனி, ஞாயிறு: **8.30-5.00 p.m.** தொடர்பு: ஆடியபாத வீதி, சரஸ்வதி மில் லேன், கொக்குவில் கிழக்கு. (84735)

## இறைச்சிக்கோழி தேவை

**Broiler** இறைச்சிக்கோழிகள் உடன் தேவை. நல்ல விலை தரப்படும். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(84693)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் - 1969, 1970 ஆம் ஆண்டு - அரச தொழில் புரியும் மணமகன்மாருக்கு மணமகள் உடன் தேவை. தொடர்பு:- **T.**சுப்பையா, கிருஷ்ணா திருமண சேவை, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (84745)

## தவறிவிட்டது

**19/1,** சின்னாலங்கண்டு ஒழுங்கை, அரியாலையைச் சேர்ந்த மயில்வாகனம் நாகம்மா என்பவரின் விசேட அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 40, மலர்மகள் வீதி, அரியாலை என்ற முகவரியில் ஒப்படைத்து உதவும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

(84737)

கனகையா ஜெயசோதி என்பவருடைய தேசிய.அ.அ.(இல.621422952v), விசேட அ.அ.(இல. 0901030903) எனபன குருநகருக்கும் கண்டி வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 18, ஆசீர்வாத லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.

(84719)

வரணி, கரம்பைக்குறிச்சி மேற்கைச் சேர்ந்த சின்னையா கமலினி ஆகிய எனது விசேட.அ.அட்டை (இல.011043140) மந்திகையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஆ.சுப்பிரமணியம், தும்பளை கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும்.

**(C/15497)**

சுதுமலை, மானிப்பாய் என்ற முகவரியைச் சேர்ந்த செல்வன் தனேஷன் என்பவரது விசேட.அ.அ. (இல.0905017553) யாழ்.இந்துக் கல்லூரிக்கும் சுதுமலை அம்மன் கோவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள விலாசத்தில் ஒப்படைத்து உதவவும்.

(84743)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? நோய் நீங்குமா? ஜாதகக் குறிப்பு, கை ரேகை, எண் விஞ்ஞானம் மூலமாகப் பதில் அளிக்கப்படும். த.சிவானந்தன் பிரபல சோதிடர், ஆனந்தா சோதிடம், 216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(84688)

# வவுனியாவில் முதல் வைபவம்

எதிர்வரும் 4ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 13ஆவது ஆண்டு சம்மேளனத்திற்கு நாட்டின் பல திசைகளிலும் இருந்து சமாதான தீபத்தை ஏந்திச் செல்வதற்கான ஏற்பாட்டின்படி, முதலாவது வைபவம் வவுனியாவில் செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது.

வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் வரவேற்று ஆரம்பித்து வைக்க வைபவம் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமாகிய பி.சுமதிபாலா தலைமையில் வவுனியா அரச செயலக முன்றிலில் நடைபெற்றது. (க)

# மரண அறிவித்தல்கள்

## கதிரவேலு நடராஜா

போயிட்டி, அச்செழுவைப் பிறப்பிடமாகவும், கல்வளை சண்டிலிப்பாயைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு நடராஜா நேற்று (28-02-2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் யுகனேஸ்வரியின் அன்புக்கணவரும், திருமதி சுசி - நடேசலிங்கம் (ஜேர்மனி), அருணகிரிநாதன் (டென்மார்க்), யோகநாதன் (லண்டன்), சிறீரங்கநாதன் (ஜேர்மனி), பத்மநாதன் (ஜேர்மனி), ஜெயகௌரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், நடேசலிங்கம் (ஜேர்மனி), செல்வராணி (**U.K**), சுகந்தினி (டென்மார்க்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ந.யுகனேஸ்வரி (மனைவி),
சண்டிலிப்பாய்.
செ.கமலேந்திரன் (பெறாமகன்),
அச்செழு.

*கல்வளை,*
*சண்டிலிப்பாய்.*

(84747)

## திருமதி சின்னத்தம்பி சிவபரிபூரணம் (பேபி அக்கா)

பொன்னர்வளவு, தொல்புரத்தை பிறப்பிடமாகவும், இலண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி சிவபரிபூரணம் அவர்கள் நேற்று முன்தினம் (27-02-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், ராதா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), ஸ்ரீ (அண்மையில் **U.K**ல் காலமானவர்), விவே (**U.K**), வசந்தா (**U.K**), சகுந்தலா (**U.K**), அருந்ததி, ஜெயம் (**U.K**), நஞ்சி (**U.K**) ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இலண்டனில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல.60,*
*வைமன் வீதி,*
*நல்லூர்.*
**(T.P:-3557)**

தகவல்:
சி.இராதாகிருஷ்ணன்
(மகன்).

(84749)

# எதிர்காலம் ஒளிமயமாக வாழ்த்துகின்றோம்



தற்போதைய யாழ்.மாநகர சபையின்
மக்கள் பிரதிநிதிகள் பதவியேற்பதற்கு முன்னரும்
பதவியேற்ற பின்னரும் தமது கண்ணியம் மிக்க
அன்பான சேவையினால்
எம் அனைவரையும்
கவரும் விதத்தில்
மாநகர ஆணையாளராகப் பணியாற்றி
தற்போது வடக்கு - கிழக்கு மாகாண
உள்ளூராட்சி ஆணையாளராகப்
பதவி உயர்வு பெற்றிருக்கும்

## உயர்திரு.வே.பொ.பாலசிங்கம்

அவர்களின்
எதிர்காலம் சுடர்விட்டுப் பிரகாசிக்க வேண்டுமென
மனதார வாழ்த்துகின்றோம்.

மாண்புமிகு மாநகர முதல்வர்,
கௌரவ பிரதி முதல்வர்,
கௌரவ அங்கத்தவர்கள்,
உத்தியோகத்தர்கள், பணியாளர்கள்,
யாழ்ப்பாண மாநகரசபை.

(C/15501)

# பிரிட்டன், அயர்லாந்து நாடுகளில் கடும் பனிப் புயலால் பெரும் பாதிப்பு!

## மின்சாரம், போக்குவரத்து துண்டிக்கப்பட்டதால் பல்லாயிரம் குடும்பங்கள் நிர்க்கதி நிலையில்

லண்டன், மார்ச் 1

**பிரிட்டனிலும், அயர்லாந்திலும், மோசமான பனிப்புயல் காரணமாக பல பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது. இதனால் பல ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

பிரிட்டனிலும், அயர்லாந்திலும் 110 கிலோ மீற்றர் வேகத்தில் கடும் பனியோடு கூடிய புயற்காற்று வீசுகிறது. இந்தப் பனிப்புயலினால் வடகிழக்கு பிரிட்டன், வட அயர்லாந்து, ஸ்கொட்லாந்து ஆகிய பகுதிகள் மோசமாகப் பாதிப்படைந்துள்ளன.

இப்பகுதிகளில் மின்சாரம் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

மின்சாரத் தடையினால், வீடுகளில் வெப்பமேற்றும் இயந்திரங்கள் செயற்படவில்லை என்றும்—

இதனால் பனிக்குளிரால் மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

வட அயர்லாந்தில் 70 ஆயிரம் குடும்பங்களும், ஸ்கொட்லாந்தில் 60 ஆயிரம் குடும்பங்களும், வடகிழக்கு பிரிட்டனில் 10 ஆயிரம் குடும்பங்களும் பனிப்புயலாலும், மின்சாரத் துண்டிப்பாலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேசமயம் பாதிப்படைந்த பகுதிகளில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்கு வாகனங்களில் சென்றவர்கள் இடைவழியில் பனிப்புயலில் சிக்கி நிர்க்கதியான நிலையில் மாட்டிக்கொண்டுள்ளனர்.

ரயில் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகவும் —

எடின்பேர்க், டப்ளின் ஆகிய விமான நிலையங்களில் சுமார் 400 விமான சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## புதிய ஆணை

லண்டன், மார்ச் 1

பிரிட்டனில் நீதிபதிகள் தாம் தண்டனை விதிக்கும் கைதிகள் சிறையிலிருக்கும் போது சென்று பார்வையிட்டு புனர்வாழ்வு சம்பந்தமாக கவனம் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்து சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

## ஆண்களின் மேலாதிக்கம் மிக்கது எகிப்தியத் தலைநகர்!

கெய்ரோ, மார்ச் 1

எகிப்தின் தலைநகரான கெய்ரோ நகரம் ஆண்களின் மேலாதிக்கம் நிறைந்த நகரம் என்று கருதப்படுகிறது.

இங்கு பெண்கள், டாக்டர்கள் மற்றும் பேராசிரியைகளாகக்கூட பணிபுரிகின்றனர். ஆனால் கெய்ரோ ஆண்கள் அவர்களைச் சமமாக நடத்துவதில்லை என்று கூறப்படுகிறது.

குறிப்பாக கெய்ரோவில் பஸ்களில் பயணஞ் செய்யும் பெண்கள் பாலியல் ரீதியிலான தொந்தரவுகளுக்கு ஆளாவதாகவும்,

எகிப்திய தலைநகர நிர்வாகம் ஆண்களின் மேலாதிக்கத்தைஒடுக்கிப் பெண்களுக்கு பாதுகாப்பு ஏற்படுத்தித்தர வேண்டும் என்றும், பெண்ணிய அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

கெய்ரோவில் பெண்களுக்கு ஏற்படும் தொல்லைகளைக் கண்டு மனம் பொறுக்காத ஆண் சட்டத்தரணி ஆன அடப் காதர் என்பவர் பெண்களுக்கு பாதுகாப்பு வழங்கக் கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார். (ஒ)

## ஆகாஷ் ஏவுகணை சோதனை வெற்றி

புதுடில்லி, மார்ச். 1

இந்தியாவில் வடிவமைக்கப்பட்டு, தயாரிக்கப்பட்ட தரையில் இருந்து விண்ணுக்குச் சென்று தாக்கும் 'ஆகாஷ்' ஏவுகணை, வெற்றிகரமாக நேற்று முன்தினம் சோதித்துப் பார்க்கப்பட்டது. 'ஆகாஷ்' ஏவுகணை 55 கிலோ.கிராம்கள் வெடி மருந்துப் பொருள்களைச் சுமந்து கொண்டு 25 கிலோ மீட்டர் தூரம் வரை சென்று, ஒரே சமயத்தில் பல இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டது.

## காலையில் தாக்கலான இந்தியப் பட்ஜெட்

புதுடில்லி, மார்ச் 1

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் முதற்றடவையாக நேற்று வேலை நாள் ஒன்றின் காலை வேளையில் வரவு-செலவுத் திட்ட அறிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கமாக மாலை நேரத்தில் தாக்கல் செய்யப்பட்டு வந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையை பாரதிய ஜனதா அரசு பகல் வேளைக்கு மாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தீவிரவாதத் தலைவர் கைது

ஸ்ரீநகர், மார்ச் 1

காஷ்மீர்த் தீவிரவாத இயக்கமான ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பின் மாவட்டத் தலைவர் கஜாகீர் அகமட் கான் தம்மிடம் சரணடைந்துள்ளதாக இந்திய இராணுவம் அறிவித்துள்ளது.

எனினும் சரணடைந்தவர் தமது அமைப்பின் உறுப்பினர் இல்லை என்று ஹிஸ்புல் முஜாஹிதீன்கள் மறுப்பு வெளியிட்டுள்ளனர். (ஒ)

## மைத்துனரால் கிளின்ரனுக்கு புதிய சிக்கல்

மைத்துனரால் அமெரிக்க முன்னாள் அதிபர் கிளின்ரன் புதிய சிக்கலில் சிக்கியுள்ளார்.

அமெரிக்க அதிபர் பதவியில் இருந்து விலகும் தறுவாயில் கிளின்ரன் சுமார் 140 பேருக்கு மன்னிப்பு வழங்கியிருந்தார். 36 பேரது தண்டனைக் காலத்தையும் குறைத்திருந்தார்.

இவ்வாறு மன்னிப்புப் பெற்றவர்களில் இருவரிடமிருந்து சட்ட ஆலோசனைக் கட்டணமாக 4 லட்சம் டொலர்களை கிளின்ரனின் மனைவியும், செனட்டருமான ஹிலாரியின் சகோதரரான ஹியூ ரொடாமும் பெற்றிருந்தனர்.

அமெரிக்காவில் வழக்கத்தில் உள்ளதை விட அதிக தொகைக் கட்டணத்தை ரொடாம் பெறுவதற்கு வசதியாக சம்பந்தப்பட்ட இருவருக்கும் கிளின்ரன் திட்டமிட்டு மன்னிப்பு வழங்கியதாக தற்போது குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

கிளின்ரனும், ஹிலாரியும் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளனர். (ஒ)

## தமிழ்நாட்டில் புலிகளுக்கு எந்த வேலையும் கிடையாது

### டாக்டர் ராமதாஸ் கூறுகிறார்



சென்னை, மார்ச் 1

தமிழ்நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எந்த வேலையும் இல்லை என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் இருந்து வெளிவரும் வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளைத் தமிழ்நாட்டில் தான் என்றுமே ஆதரித்ததில்லை என்றும்—

இலங்கையில் போராடும் அவர்களுக்குத் தமிழகத்தில் எந்த வேலையும் இல்லை என்றும்—

ராமதாஸ் பேட்டியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழர்களது நலனுக்காகத் தமிழீழம் அமைய வேண்டும் என்பதனைத் தான் ஆதரிப்பதாகவும் ராமதாஸ் கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளரான டாக்டர் ராமதாஸ் தற்போது அ.தி.மு.க. கூட்டணியில் இணைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-7-10)

## அ.தி.மு.க.கூட்டணி குறித்த பேச்சு தொகுதி ஒதுக்கீடால் தேக்கம்

சென்னை, மார்ச் 1

அ.தி.மு.க. கூட்டணியில் தமிழ் மாநில காங்கிரஸும் அகில இந்திய காங்கிரஸும் இணைவது தொடர்பாக இடம்பெற்று வந்த பேச்சுகள் தேக்க நிலையை அடைந்துள்ளதாக தமிழக அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

தொகுதிப் பங்கீடு குறித்த இழுபறியினாலேயே பேச்சுகளில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் தேர்தலில் த.மா.காவுக்கு 30 இடங்களும், காங்கிரஸுக்கு 10 இடங்களும் ஒதுக்குவதாக அ.தி.மு.க. தரப்பில் முன்னர் கூறப்பட்டதாகவும் —

ஆனால் தற்போது இரு கட்சிகளுக்கும் சேர்த்து 35 தொகுதிகளே தரப்படும் என்று ஜெயலலிதா தெரிவித்துள்ளதாகவும் —

த.மா.காவின் மூத்த தலைவர் ஒருவர் கூறினார்.

இதற்கு ஒத்துக் கொள்ள மறுப்பதாலேயே பேச்சில் தேக்கம் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில்

அ.தி.மு.க. கூட்டணியில் சேரும் கட்சிகளின் கூட்டத்தை இன்று நடத்துவதாக அறிவித்திருந்த ஜெயலலிதா அந்தக் கூட்டத்தை எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

(ஒ)

## மூப்பனாரை வீரமணி சந்தித்தார்

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் மூப்பனாரை திராவிடர் கழகத் தலைவர் வீரமணி நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

மூப்பனாரின் உடல் நிலை குறித்து நலம் விசாரிக்கச் சென்றதாக வீரமணி கூறியுள்ள போதிலும், தேர்தல் கூட்டணி தொடர்பாக ஜெயலலிதாவின் தூதராகவே வீரமணி மூப்பனாரைச் சந்தித்ததாகக் கருதப்படுகிறது.

(ஒ)

# அமைதியில் அக்கறையிருந்தால் காஷ்மீர் பேச்சை ஆரம்பிக்குக!

## இந்தியாவுக்கு முஷாரப் வேண்டுகோள்

இஸ்லாமாபாத், மார்ச் 1

காஷ்மீர் தொடர்பான பேச்சைத் தொடர இந்தியா தாமதித்தால், அமைதியை ஏற்படுத்துவதில் அதற்கு அக்கறை இல்லை என்ற கருத்து வலுப்பெறும்.

இவ்வாறு பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப் கூறியுள்ளார்.

நல்லெண்ண அடிப்படையில் பாகிஸ்தான் சென்றுள்ள இந்திய முன்னாள் இராணுவ அதிகாரிகள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் மத்தியில் பேசும் போதே முஷாரப் இதனைக் கூறினார்.

அமைதிப் பேச்சுக்களை மீண்டும் தொடங்க விருப்பம் தெரிவித்த முஷாரப், பேச்சு நடத்த பாகிஸ்தானுக்கு வர விரும்பும் காஷ்மீர்த் தீவிரவாத, அரசியல் தலைவர்களுக்குத் தடையின்றி இந்திய அரசு அனுமதி வழங்க வேண்டும் என்றும் கோரினார்.

குஜராத் பூகம்பத்தின் பின்னர், இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் தொலைபேசி மூலம் தான் பேசியதால் மேம்பட்டுள்ள இருநாடுகளிடையேயான உறவை வீணடிக்க விரும்பவில்லை என்றும், அதேசமயம், இரு நாடுகளுக்கிடையே உறவு வலுப்பட பேரழிவுகள் நடைபெறத் தேவையில்லை என்றும்— முஷாரப் தனது பேச்சில் குறிப்பிட்டார்.

(ஒ-7-10)


## கண்ணீர் அஞ்சலி

### A. K. துரைசிங்கம்

(A. K. T. லண்டன்)

23-01-2001 அன்று சென்னையில் கொடியவர்களால் படுகொலை செய்யப்பட்ட வேலணை மேற்கு சிற்பனையைச் சேர்ந்தவரும், முன்னாள் காலி பிரபல வர்த்தகரும், சமய சமூக சேவையாளரும், அம்பாளின் தீவிர பக்தருமாகிய A. K. துரைசிங்கம் அவர்களின் அகால மறைவினால் கதிகலங்கி நிற்கும் அன்னாரது மனைவி, மக்கள், உடன்பிறப்புகள், உறவினர் யாபேரினதும் துயரத்தில் நாமும் இணைந்து கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மகாமாரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:

து. சிவஞானச் செல்வம்

ஆலய அறங்காவலர்.

புளியங்கூடல் செருத்தனைப்பதி,

ஸ்ரீமகாமாரி அம்பாள் தேவஸ்தானம்,

ஊர்காவற்றுறை.

(84751)

## சாவகச்சேரி இந்து போக்கட்டி அ.த.க. மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், மார்ச்.1

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, போக்கட்டி அ. த. க. பாடசாலை ஆகியவற்றில் கல்வி பயின்று தற்பொழுது வேறு பாடசாலைகளில் தரம் 5 இல் பயிலும் மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சை விண்ணப்பம் நிரப்பப்பட வேண்டியுள்ளதால் —

மாணவர்களின் பெற்றோரது ஆண்டு வருமானம் 6 ஆயிரம் ரூபாவுக்குக் குறைவாக இருப்பின் தங்கள் பகுதிக் கிராம அலுவலரின் சிபாரிசுக் கடிதத்துடன் நாளை வெள்ளிக்கிழமை வரை அல்வாய் சதா பொன்ஸ் கல்வி நிலையத்துக்கு பிற்பகல் 2 மணிக்கு முன்னர் வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு அதிபர்கள் கூட்டாகத் தெரிவித்துள்ளனர். (க-10)

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 1

நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு அதிபர் திருமதி த. கமலராஜா தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா. வரதராஜாவும் சிறப்பு விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஞா. தெய்வேந்திரராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-10)

★ ★ ★

யாழ். கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அதிபர் அருட்சகோதரி மேரி டன்ஸ்ரன் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கல்வித் திணைக்களப் பொறியியலாளர் ஜி. சிவபாலனும் சிறப்பு விருந்தினராக இளைப்பாறிய அதிபர் மேரி விக்ருவாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-10)

★ ★ ★

சங்கானைக் கல்விக் கோட்ட பாடசாலைகளின் கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவு மெய்வன்மைப் போட்டி, இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில், சங்கானைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் பிரதம விருந்தினராகவும், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி பாலசிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர் (உ-29)

★ ★ ★

சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு அதிபர் சு. சண்முககுலகுமாரன் தலைமையில் நடைபெறும்.

உடுவில் மத்திய மருந்தக வைத்திய அதிகாரி டாக்டர் என். சண்முகராஜா இப்போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-152)

★ ★ ★

மட்டுவில் கமலாசனி வித்தியாலய வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி வல்வெட்டித்துறை தீருவில் மைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு அதிபர் செ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும் சிறப்பு விருந்தினராக வல்லை சிவகுரு வித்தியாலய அதிபர் த. தவேந்திரராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (க—5)

★ ★ ★

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திருமதி எஸ். ஜெயராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளருமான இ. மகேந்திரனும் அவரது பாரியார் திருமதி லலிதா மகேந்திரனும் கௌரவ விருந்தினராக யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த அருணகிரிராஜாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (க—10)

## யாழ்., நல்லூர், கோப்பாய் பகுதிகளில்

# மீளக்குடியமரும் மக்களின் விவரம் தற்போது சேகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 1

யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர், கோப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் மீளக்குடியமரும் குடும்பங்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன

மீளக்குடியமரும் குடும்பங்களின் விவரங்களை கிராம சேவகர் பிரிவு ரீதியாக சேகரித்து யாழ் செயலகப் புனர்வாழ்வு பகுதிக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு அரசாங்க அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்தே இந்தக் குடும்பங்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

மீளக்குடியமரும் மக்களின் விவரங்கள் திரட்டப்படுவதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படாத போதும் மேலிடத்திற்கு அனுப்பி வைப்பதற்காகவே விவரங்களை சேகரிப்பதாக கிராம சேவகர்கள் தெரிவித்துள்ளனர்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 11 கிராம சேவகர் பிரிவுகளில் தற்போது விவரம் திரட்டும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. (க-6)


# அறிவித்தல்

## பனை அபிவிருத்திச் சபை

### பனம் கைப்பணி உற்பத்திப் பொருள்கள் கொள்வனவு

தரமான பனைசார் கைப்பணிப் பொருள்கள் பனை அபிவிருத்திச் சபையால் நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும். எனவே இந்த உற்பத்திகளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் தங்களினால் உற்பத்தி செய்யப்படும் பனம் கைப்பணிப் பொருள்களின் மாதிரியுடன் அருகிலேயுள்ள கற்பக விற்பனை நிலையத்தில் அல்லது சபையின் தலைமைக் காரியாலயத்தில் தொடர்புகொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

தலைமையகம்,
பனை அபிவிருத்திச் சபை,
இல. 53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/15503)



# பல்கலைக்கழகத் துணைவேந்தரின் சேவை பெருகட்டும்!

சிரித்த முகம் சிந்திக்கும் விழிகள்
அறிவின் முதிர்வில் பெருகிய ஆற்றல்
துணைவேந்தர் பணியில் துணிவான சாதனைகள்
நிகழ்த்திவிட்டீர் முதல் மூன்றாண்டில்!
பின் மூன்றாண்டில் பிரிந்தது வருடமொன்று
சோதனைகள் தாண்டிப் பெரும்
சாதனைகள் செய்திடுவீர்!
எம்மக்கள் உயர்கல்வித் தாகத்தைத் தீர்த்திடவே
போற்றுகின்றோம் உமை பொன். பாலசுந்தரனாரே!

குறிப்பு:- இவரது சேவையினை நினைவுகூரும் முகமாக 09-03-2001 வெள்ளிக்கிழமை பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் 1008 நவோத்திர சங்காபிஷேகம் இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வாழ்த்துபவர்:- ச.க. தனேந்திரன்

(84753)


# இரண்டாம் தடவை பாடநூல்கையளிப்பு

வலிகாமம் கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்குரிய இலவச பாடநூல்கள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று நாள்களிலும் இரண்டாம் தடவையாக வழங்கப்பட்டுள்ளன.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் வைத்து தெல்லிப்பழை, உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய் கோட்ட பாடசாலை அதிபர்களிடம் பாட நூல்கள் கையளிக்கப்பட்டன.

இம் முறையும் போதிய பாடநூல்கள் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. 3, 8, 11 ஆம் தரங்களுக்கு புதிய பாடநூல்கள் வழங்க வேண்டி இருந்த போதிலும் குறைவான நூல்களே கிடைத்துள்ளன. (க—152)

## சூரியவெவ பகுதியில் பொலீஸார் சூடு:

# சூறையாடிய நகைகள், பணத்தை கைவிட்டு ஓடினர் கொள்ளையர்!

கொழும்பு, மார்ச் 1

தென்மாகாணம் சூரியவெவப் பகுதியில் நகைக்கடை ஒன்றைக் கொள்ளையிட்ட ஆயுதக்குழுவினர், பொலீஸாரின் சரமாரியான துப்பாக்கிச் சூடு காரணமாக பணம் மற்றும் 20 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளைக் கைவிட்டு தப்பியோடியுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த வார இறுதியில் நடைபெற்றுள்ளது.

கொள்ளையர்கள் கடத்தி வந்த லொறியும் அதற்குள்ளிருந்து ரீ-56 ரக துப்பாக்கி மற்றும் இரண்டு கிரனேட்டுகள் சில ரவைகளும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது;

நால்வர் கொண்ட குழுவினர் கடைக்குள் அத்துமீறிப் புகுந்து துப்பாக்கியால் சுட்டு பாதுகாப்புப் பெட்டகத்தைத் திறக்கச் செய்தனர். அதனுள் இருந்து தங்க ஆபரணங்களையும், பணத்தையும் சூறையாடிக் கொண்டு லொறியில் ஏறித் தப்பி ஓடினர். வழியில் ஒரு சோதனைச் சாவடி.

முன்னரே துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டிருந்ததால் உஷார் நிலையிலிருந்த பொலீஸாரே லொறி மீது சுட்டனர். கொள்ளையரும் திருப்பிச் சுட்டுவிட்டு லொறியைக் கைவிட்டு விட்டு ஓட்டம் பிடித்துவிட்டனர். (க·20)

# காங்கேசன் முகாம் கைதிகள் வன்னிக்கு கடிதங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 1

காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விடுதலைப்புலிகளின் துணைப் படையைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் ஏழு பேர் மனித உரிமைகள் ஆணைக் குழு ஊடாக வன்னியிலுள்ள தமது உறவினர்களுக்குக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

நேற்று இந்த முகாமுக்கு விஜயம் செய்த மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். கிளை அதிகாரி சட்டத்தரணி என். ஜீவேஸ்வரா மேற்படி கைதிகளைச் சந்தித்து உரையாடினார்.

இச்சந்திப்பின் போது கைதிகள் வன்னியிலுள்ள உறவினர்களுக்குத் தாம் எழுதிய கடிதங்களை அனுப்பி வைக்குமாறு அவரிடம் கையளித்தனர்.

இந்தக் கடிதங்களை ஆணைக் குழுவின் அதிகாரி உரியவர்களுக்கு நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

இந்த ஏழு பேரும் கடந்த டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி கைதடிப் பகுதியில் சரண் அடைந்தார்கள் என்று கூறப்படுகிறது. (உ-5)

# தென்மராட்சி மாணவர்களை விவரங்களைப் பதியக்கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 1

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இருந்து ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு இந்த ஆண்டு இரண்டாவது தடவையாகத் தோற்ற இருப்பவர்கள் தமது விவரங்களை இணுவில் மத்திய கல்லூரியிலும் நெல்லியடி மத்திய கா வித்தியாலயத்திலும் இயங்கும் மேற்படி கல்லூரியில் பாடசாலை நேரத்தில் பதிவு செய்யுமாறு அதிபர் கேட்டுள்ளார்.

இதேவேளை—

மேற்படி கல்லூரியில் இருந்து ஜனாதிபதி புலமைப் பரிசிலுக்கு உரித்தான 6 மாணவர்கள் தமக்குரிய காசோலைகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அதிபர் தெரிவித்துள்ளார்.

கே. சிவகரன், பா. பர்த்தீபன், பி. ஜெகதீஸ்வரன், எஸ். சிவமுகுந்தன், பி. நிருஜா, கே. சசிகலா ஆகியோரையே காசோலைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

★ ★ ★

கச்சாய் அ. த. க. பாடசாலையில் கல்வி கற்று தற்போது வேறு பாடசாலைகளில் தரம் 5 இல் கல்வி பயிலும் சகல மாணவர்களும் தமது விவரங்களை எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியில் பதிவு செய்து கொள்ளுமாறு அதிபர் கோரி உள்ளார்.

தமது குடும்பத்தின் வருடாந்த வருமானம் 6000 ரூபாவிலும் குறைவான மாணவர்கள் அதனைக் கிராம அலுவலர் மூலம் உறுதிப்படுத்திய கடிதத்துடன் சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

★ ★ ★

சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் பயின்று தற்போது இடம்பெயர்ந்து பிற பாடசாலைகளில் கற்கும் தரம் 5 மாணவர்கள் தமது விவரங்களை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில் பதியுமாறு அதிபர் கோரியுள்ளார். குடும்பத்தின் வருடவருமானம் எவ்வளவு என்பதை கிராம அலுவலரின் மூலம் உறுதிப்படுத்திய கடிதங்களை எடுத்துவருமாறும் அவர் கூறியுள்ளார். [ம]

## 'சீடா' திட்டத்தின் கீழ்

# விவசாயிகளுக்கு விநியோகிக்க 125 நீரிறைக்கும் இயந்திரங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ். மாவட்ட விவசாயிகளுக்குச் ''சீடா'' திட்டத்தின் கீழ் வழங்குவதற்கென 125 நீர் இறைக்கும் இயந்திரங்கள் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் எடுத்துவரப்பட்டுள்ளன.

இவற்றில் வேலணை கமநல கேந்திர நிலையங்களின் ஊடாகப் பணம் செலுத்திய 65 விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் இவை வழங்கப்படவுள்ளன. எஞ்சியவை ஏனைய கமநல கேந்திர நிலையங்களின் ஊடாக விநியோகிக்கப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் 'குபோட்டா' ரக இரண்டு சில்லு உழவு இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளன என்றும் தேவையானவர்கள் தமது பகுதிப் பெரும்பாக உத்தியோகத்தர் ஊடாக விண்ணப்பித்தால் அவற்றைக் கடனடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் சுந்தரேசன் தெரிவித்தார். (க-ரி-10)

# மெய்வன்மை அலுவலர் பரீட்சையின் முடிவுகள்

கொழும்பு,மார்ச்1

மெய்வன்மை சட்டவிதிகளில் தேர்ச்சி பெற்றோரைத் தெரிவு செய்வதற்கும் தரம் உயர்த்துவதற்குமாக ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம் அண்மையில் நடத்திய பரீட்சையில் யாழ். மாவட்டத்திலிருந்து தோற்றி சித்தி பெற்றோர் விவரம் வருமாறு:- (அடைப்புக்குள் அவர்கள் பெற்ற புள்ளிகள் குறிப்பிடப்பட்டுள்ளன)

### தரம் IV

எம்.ஆர்.மோகனதாஸ் (87½), ரி.மகேஸ்வரலிங்கம் (84½), பி.ஏ.கவிதா (84½), கே.சுதாகரன் (84), கே.விஜிதரன் (83), எம்.பி.டிறுஞ்சன் (82½), கே.அன்பரசி (82½), பி.இராஜலிங்கம் (82½), என்ஸ்ரீமுருகதாஸ்கந்தன் (81), ஜி. பிரபாகரா (81), எஸ்.மகிந்தன் (80½), எஸ்.இராதகிருஷ்ணன் (79), எம்மதிவதனன் (79) எம்இளம்பிறையன் (78½), ஏ.ஆனந்தன் (78), எஸ்.தயாளன் (76½), இ. சாரங்கன் (76½), பி.பரமேஸ்வரன் (76½), எஸ்.ரமணன் (76), வை.என். அனுசியா (75), சுரேஸ்குமார் (75), எஸ்.புஷ்பாகரன் (73½), பேர்ணாட் அஞ்சலம் (73½), எஸ்.சுகந்தன் (73), கே.முகுந்தன் (73), பி.கருணாகரன் (72½), எம்.கந்தசெல்வன் (72½), ரி.சிவகுமார் (72½), எம்.கனகரத்தினம் (72½), எஸ்.சுரேஷ்மோகன் (71½)

பி.வாசுதேவன் (70½), ஏ.பிரேமானந்தன் (70½), ரி.சிவபாலன் (70), என்.திலகராஜ் (69½), ரி.துஷியா (68½), என்.மதியழகன் (68), ரி.ராதாகிருஷ்ணன் (67½), கே.முதலிக்குட்டி (66½), கே.சிவகௌரி (66½), எஸ்.சிவமோகன் (66½), எஸ்.கௌசிகன் (65½), ஜி.விமலன் (65½), வை.விமலன் (65½), எஸ்.நிமலன் (65½).

### தரம் III

பி.முருகவேள் (90), எ.ராதை (88), எம்.பி.பனிஸ்ரர் (88), ஜி.டி.மதியழகன் (87), வி.சுந்தரலிங்கம் (86), ரி.சிவசோதி (86), எஸ்.சதீஸ்குமார் (85½), எஸ்.ஜெயானந்தகுமாரி (84), ஆர்.செல்வராசா (83½), எஸ்.சுரேந்தினி (80), என்.வித்தியாதரன் (79½).

இந்தப் பரீட்சை முடிவுகளை ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு நேற்று மாலை கொழும்பில் நடைபெற்ற அதன் கூட்டத்தில் அங்கீகரித்தது.

தரம் இரண்டுக்குத் தோற்றியோருக்கான பரீட்சை முடிவுகள் நேர்முகப் பரீட்சையின் பின்னரே வெளியாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்வதற்கு இம்மாதம் 27 ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(160525ஏ) (160525பி) (160525சி)
(160525டி) (160525ஈ) (183304ஏ)
(183304பி)

**யாழ்ப்பாணம்**

(168446ஏ) (168446பி) (168446சி)
(168446டி) (178019ஏ) (178414ஏ)
(178414பி) (178414சி) (179891ஏ)
(179913ஏ) (179931ஏ) (179931பி)
(179931சி) (179969ஏ) (180096ஏ)
(180096பி) (180129ஏ) (180129பி)
(180129சி) (180168ஏ) (180168பி)
(180216ஏ) (180216பி) (181706ஏ)
(181706பி) (181711ஏ) (181711பி)
(181714ஏ) (181714பி) (181714சி)
(181717ஏ) (181733ஏ) (181733பி)
(181747ஏ) (181760ஏ) (181760பி)
(181766ஏ) (181766பி) (181766சி)
(181766டி) (181778ஏ) (181778பி)
(181778சி) (181797ஏ) (181797பி)
(181797சி) (181797டி) (181797ஈ)
(181803ஏ) (181803பி) (181808ஏ)
(181808பி) (181808சி) (181808டி)
(181813ஏ) (181822ஏ) (181824ஏ)
(181824பி) (181829ஏ) (181829பி)
(181851ஏ) (181864ஏ) (181864பி)
(181871ஏ) (181871பி) (181898ஏ)
(181898பி) (181898சி) (181898டி)
(181916ஏ) (181944ஏ) (181992ஏ)
(182000ஏ) (182016ஏ) (182016பி)
(182040ஏ) (182050ஏ) (182079ஏ)
(182079பி) (182079சி) (182084ஏ)
(182084பி) (182098ஏ) (182098பி)
(182102ஏ) (184348ஏ) (184348பி)
(184362ஏ) (184362பி) (184362சி)
(184362டி) (184363ஏ) (184363பி)
(184388ஏ) (184403ஏ) (184403பி)
(184404ஏ) (184404பி) (184407ஏ)
(184424ஏ) (184424பி) (184424சி)
(184426ஏ) (184426பி) (184426சி)
(184426டி) (184430ஏ) (184440ஏ)
(184466ஏ) (184468ஏ) (184468பி)
(184468சி) (184468டி) (184468ஈ)
(184509ஏ) (184539ஏ) (184563ஏ)
(184577ஏ) (184627ஏ) (184627பி)
(184658ஏ) (184662ஏ) (184669ஏ)
(184671ஏ) (184720ஏ) (184720பி)
(184720சி) (184720டி) (184779ஏ)

**ஊர்காவற்றுறை**

(14636ஏ) (14733ஏ)

**கோப்பாய்**

(181028ஏ) (181028பி) (181028சி)
(181979ஏ) (181979பி)

**நல்லூர்**

(101989ஏ) (162404ஏ) (171954ஏ)
(171954பி) (171954சி) (180132ஏ)
(180147ஏ) (180250ஏ) (181715ஏ)
(181715பி) (181715சி) (181730ஏ)
(181730பி) (181730சி) (181730டி)
(181730ஈ) (181800ஏ) (181800பி)
(181821ஏ) (181821பி) (181833ஏ)
(181838ஏ) (181838பி) (181884ஏ)
(181923ஏ) (181923பி) (182044ஏ)
(182044பி) (184342ஏ) (184342பி)
(184378ஏ) (184409ஏ) (184436ஏ)
(184447ஏ) (184484ஏ) (184529ஏ)
(184529பி) (184538ஏ) (184663ஏ)
(183122ஏ) (183431ஏ) (183431பி)
(184898ஏ) (184898பி) (184898சி)

**சண்டிலிப்பாய்**

(183479ஏ) (184869ஏ)

**தெல்லிப்பழை**

(175091ஏ) (183051ஏ) (183051பி)
(183051சி) (183265ஏ)

**உடுவில்**

(182781ஏ) (182781பி) (182781சி)
(182781டி) (182781ஈ) (183121ஏ)
(183121பி) (183299ஏ) (183868ஏ)
(183868பி).

இம்மாதம் 28ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(161606ஏ) (161606பி) (161606சி)
(179401ஏ) (179442ஏ) (181459பி)
(181549ஏ) (183088ஏ) (183088பி)
(183127ஏ) (183127பி) (183211ஏ)
(183503ஏ)

**சாவகச்சேரி**

(180384ஏ) (180384பி)

**கரவெட்டி**

(151188ஏ) (151188பி) (158216ஏ)
(158216பி) (162037ஏ) (162037பி)
(162037சி) (162037டி) (167332ஏ)
(167332பி) (167388ஏ) (167388பி)
(167413ஏ) (167414ஏ) (167414பி)
(169519ஏ) (169519பி) (174637ஏ)
(176230ஏ) (176230பி) (176314ஏ)
(176314பி) (176377ஏ) (176483ஏ)
(177833ஏ) (177883பி) (177871ஏ)
(177892ஏ) (177892பி) (177916ஏ)
(177980ஏ) (177980பி) (177988ஏ)
(177997ஏ) (177997பி) (178004ஏ)
(178010ஏ) (180451ஏ) (180451பி)
(180483ஏ) (180483பி) (180484ஏ)
(180484பி) (180493ஏ) (180493பி)
(180493சி) (180493டி) (180497ஏ)
(180497பி) (180511ஏ) (180511பி)
(180537ஏ) (180560ஏ) (180563ஏ)
(180593ஏ)

**நல்லூர்**

(179414ஏ) (182691ஏ) (182691பி)
(182811ஏ) (182811பி) (183036ஏ)
(183036பி) (183138ஏ) (183223ஏ)
(183224ஏ) (183319ஏ) (183321ஏ)
(183321பி) (183335ஏ) (183337ஏ)
(183341ஏ) (183477ஏ) (183477பி)
(184842ஏ) (184842பி) (184842சி)
(184870ஏ) (184870பி) (184870சி)
(184870டி) (184870ஈ) (184916ஏ)
(184940ஏ) (184943ஏ)

**பருத்தித்துறை**

(146227ஏ) (146227பி) (162033ஏ)
(162033பி) (162033சி) (165420ஏ)
(167466ஏ) (167466பி) (169560ஏ)
(176296ஏ) (176296பி) (176329ஏ)
(176329பி) (176329சி) (176329டி)
(176329ஈ) (176427ஏ) (176513ஏ)
(177570ஏ) (177570பி) (177678ஏ)
(176923ஏ) (178006ஏ) (180379ஏ)
(180392ஏ) (180392பி) (180392சி)
(180392டி) (180430ஏ) (180430பி)
(180439ஏ) (180445ஏ) (180445பி)
(180445சி)

**சண்டிலிப்பாய்**

(175090ஏ) (175090பி) (175090சி)
(175090டி) (181564ஏ) (181564பி)
(181621ஏ) (181621பி) (182739ஏ)
(182757ஏ) (182757பி) (182757சி)
(182757டி) (182828ஏ) (182828பி)
(182865ஏ) (182865பி) (182865சி)
(183047ஏ) (183349ஏ) (183395ஏ)
(183429ஏ) (183451ஏ) (183451பி)
(183463ஏ) (183463பி) (183463சி)
(183472ஏ) (183472பி) (183475ஏ)
(183475பி) (183475சி) (183508ஏ)
(184907ஏ) (184907பி) (184919ஏ)
(184920ஏ) (184931ஏ) (184931பி)

**தெல்லிப்பழை**

(183383ஏ) (183383பி) (183383சி)
(183393ஏ) (183393பி) (183393சி)
(183393டி) (183524ஏ)

**உடுவில்**

(176825ஏ) (176825பி) (176825சி)
(176825டி) (179305ஏ) (180315ஏ)
(180315பி) (183034ஏ) (183235ஏ)
(183235பி) (183316ஏ) (183316பி)
(183327ஏ) (183354ஏ) (183365ஏ)
(183365பி) (183379ஏ) (183379பி)
(183402ஏ) (183416ஏ) (183416பி)
(183420ஏ) (183425ஏ) (183425பி)
(183425சி) (183427ஏ) (183455ஏ)
(183465ஏ) (183465பி) (183465சி)
(183465டி) (183465ஈ) (183465எவ்)
(183497ஏ) (183497பி) (184832ஏ)
(184951ஏ) (184951பி).

(க-10)

ஸ்ரீ ராம ஜெயம்

## வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்

### இலட்ஷார்ச்சனை பூர்த்தி விழா

நாளை (02.03.2001) வெள்ளிக்கிழமை மாசி 18 ஆம் நாள் காலை 8.30மணிக்கு

மூலவர் ஸ்நபனாபிஷேகம்
தொடர்ந்து பூஜை, வசந்தமண்டபப் பூஜை,
அர்ச்சனை, ஹோமம், திருவருட் பிரசாதம் வழங்கல்.

மாலை 2.30 மணி மாலைப் பூஜைகள்

வசந்தமண்டபப் பூஜை இலட்ஷார்ச்சனை,
விசேட உபசார ஹோமம், பிரதட்சணை நமஸ்காரம்,
வேத தீப தோத்திர ஆசீர்வசன திருவாய் மொழி
பாராயணம், திருவருட்பிரசாதம் வழங்கல்

இலட்ஷார்ச்சனை பூர்த்தி வைபவம் பொது உபயமானபடியால் அதில் பங்கு பற்றும் அடியார்கள் மாலை 3 மணிக்கு ஆலயத்திற்கு வந்து கலந்து திருவருள் பெற்றேகுமாறு வேண்டுகிறோம்.

சுபம்

(84764) - ஆதீன மகா சபை.

## விபத்தில் படுகாயம்

சங்கானைப் பகுதியில் நேற்று முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்ற மினிபஸ்-சைக்கிள் விபத்தில் சிக்கி விவசாயி ஒருவர் படுகாயமடைந்தார்.

சங்கானை நிச்சாமம் பகுதியைச் சேர்ந்த முதலி. பரமு(வயது-65) என்பவரே படுகாயமடைந்து யாழ்ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(க-6-ரி)

## கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவா ஒன்றியத்தின் விளையாட்டு விழா பற்றிய கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முகாமைத்துவ மண்டபம் III இல் இடம்பெறும் என்று ஒன்றியம் அறிவித்துள்ளது. (உ-ஒ)

## உதவுங்கள்

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற அன்னை சாரதா தேவியாரின் ஜெயந்தி விழா ஒளிப்பதிவு நாடா வெளிவந்து விட்டது. இதனைப் பார்க்க நாட்டமுள்ள பண வசதியுள்ளோர். ரூபா 500 உடன் தி.கண்ணன், 15/1 இராமநாதன் வீதி, யாழ்பபாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். நீங்கள் கொடுக்கும் பணமானது நலிவுற்றோர், போரினால் பாதிக்கப்பட்டோருக்குப் பயன்படும் . இதனைப் பார்க்க ஆவலாக இருக்கும வசதியற்றோருக்கு குறுகிய காலத்தில் பொதுஇடத்தில் இலவசமாகக் காண்பிக்கப்படும்.

*15/1 இராமநாதன் வீதி,*
*தலையாளி, யாழ்ப்பாணம்.* (84765)

தி.கண்ணன்

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி இந்துக் கல்லூரி தரம் 11 மாணவியும் எமது கல்வி நிறுவன மாணவியுமாகிய

### செல்வி கமலினி குமாரசாமி

(மட்டுவில் வடக்கு, சந்திரபுரம்)

அவர்களின் அகால மரணம் குறித்து நாம் ஆழ்ந்த துயரம் அடைந்துள்ளோம். அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி அவரது ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர், சகமாணவர்கள்
*தென்மராட்சி எக்சலண்ட் கல்வி நிலையம்,*
இணுவில்.

(84759)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியராகக் கடமை புரியும்
திருமதி இலட்சுமி ஜெகதீசன அவர்களின் அன்புக் கணவர்

### இராமநாதன் ஜெகதீசன்

அவர்கள் 27-02-2001 ஆந் திகதி இறைவனடி சேர்ந்தமையையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய காரைநகர் மணற்காடு ஸ்ரீ மாரியம்மனைப் பிரார்த்திப்பதுடன் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
ப.நோ.கூ.சங்கம்.
*காரைநகர்*

(C/15506)

## மரண அறிவித்தல்கள்

### சுந்தரம் முருகையா

(முன்னாள் நெல் சந்தைப்படுத்தும் சபை களஞ்சியப் பொறுப்பாளரும் உரக் கூட்டுத்தாபன களஞ்சியப் பொறுப்பாளரும்)

தெல்லிப்பழை, மாத்தனையைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் பறாளாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் முருகையா நேற்று (28-02-2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அம்பிகாதேவியின் அன்புக் கணவரும் இராசலட்சுமி, பரமேஸ்வரி, வெற்றிவேலு ஆகியோரின் சகோதரரும் நவரத்தினம் (வைத்திய அதிகாரி Fordyse Estate Dickoya), செல்லப்பா (மானிப்பாய) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை, சிதம்பரப்பிள்ளை (செட்டி வாத்தியார்.ஓய்வுபெற்ற அதிபர்) மற்றும் செல்லையா விஜயரத்தினம் (கொழும்பு) ஆகியோரின் சகலனும் சிவசம்புவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-03-2001) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பறாளாய் வீதி,*
*சுழிபுரம்.* (84763)

தகவல்:
அம்பிகாதேவி (மனைவி),
செல்லப்பா (மைத்துனர்)

### கமலினி குமாரசாமி

(சாவகச்சேரி இந்துக் கல்லூரி தரம் 11 மாணவி - தற்போது இணுவில் மத்திய கல்லூரி)

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட கமலினி குமாரசாமி நேற்று (28-02-2001) புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் ஏழாலை சரவணை குமாரசாமி (கிளை முகாமையாளர் சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்) புஸ்பராணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், தில்லைநாதன் (J.P - ஏழாலை), சொக்கலிங்கம், பத்மநாதன் (சுன்னாகம்), திரு. திருமதி ஜெயராசா, செல்வராணி ஆகியோரின் பெறாமகளும், முருகையா (மட்டுவில், S.S.O நெடுந்தீவு), யோகரத்தினம், பாக்கியலட்சுமி, சரோசாதேவி ஆகியோரின் மருமகளும், கந்தையா - யோகமலர் (மட்டுவில்) தம்பதிகளின் பேர்த்தியும் லீனதயாளன், தமிழினி, தயாளினி ஆகியோரின் சகோதரியும் சிவகாந்தன், ஜெயகாந்தன், சசிகாந்தன், தர்சினி (தொண்டராசிரியர் ஏழாலை மகா வித்தியாலயம்) தாரணி, மைதிலி, மயூரன், சங்கீபன், பார்த்திகா ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும், சேர்ந்தனா, மதுசன், துளசி, பிரிந்தாவன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-03-2001) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*S.T.N வீதி,*
*சுன்னாகம்.* (84766)

தகவல்:
ச.குமாரசாமி -(தந்தை)

## சந்திரிகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களையும் இலக்கு வைத்துப் புலிகள் தாக்குதல் நடத்தி வருகின்றார்கள். இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி உட்படப் பலரைக் கொல்வதற்காகத் தற்கொலைத் தாக்குதல்களைப் புலிகள் நடத்தி வருவதாக இலங்கை அரசுத் தரப்புக் கூறுகின்றது.

புலிகள் நேரடியாக மேற்கு நாட்டவர்கள் மீது தாக்குதல் எதையும் தொடுக்கவில்லை. எனினும் புலிகளின் தாக்குதல்களில் சிக்கி மேற்கு நாட்டவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிரிட்டனில் புலிகள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடவில்லை. அவர்களது நாட்டுக்கு வெளியே அவர்கள் நடத்திய தாக்குதலாக ராஜீவ் காந்தி படுகொலைச் சம்பவம் காட்டப்படுகின்றது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கிழக்குப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழகச் சமூகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் விரிவுரையாளர்கள், மாணவர்கள்,கல்விசாரா ஊழியர்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை-

மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை இராணுவச் சீருடை அணிந்த சிலர் புகைப்படம் பிடித்தபோது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குடைகளாலும் தொப்பிகளாலும் முகங்களை மறைத்துத் தமது எதிர்ப்பைக் காட்டினர் எனவும் - மட்டக்களப்புச் செய்திகள் தெரி வித்தன.

மட்டக்களப்பு மாநகரசபைக் கட்டடத்தில் இயங்கும் 233 ஆவது படையணி அலுவலகத்தில் கடந்த திங்களன்று நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் மட்டக்களப்பு இணைப்பதிகாரி கேணல் வீ.எஸ்.ஆர்.அன்ரனீஸ் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற "பொங்கு தமிழ்" எழுச்சி நிகழ்வு விடுதலைப் புலிகளால் ஏற்பாடு செய்யப்பட்டது எனத் தெரிவித்திருந்தார் என்பது தெரிந்ததே. (உ-7-21)

செல்வா சினிமா
ஸ்ரான்லி வீதி
அனேக ரசிகர்களின்
வேண்டுகோளிற்கிணங்க
தாலிகாத்த அம்மன்
(பிரபு, கௌசல்யா)
நேரடி CD
காட்சிகள்: 10.30, 2.30
(ப.நே.) (சி15509)

# கிரனேட்டுடன் கைதான சம்பவம்: சுரேஷ் அணித் தரப்பு விளக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்1

"ஊரடங்குவேளை கிரனேட்டுடன் நடமாடிய ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணி உறுப்பினர்கள் இருவர் கைது!"- என்ற தலைப்பில் நேற்றைய 'உதயன் பத்திரிகையில் வெளியான செய்தி குறித்து, அந்த அணியின் யாழ். அலுவலகம் நிலைமையைத் தெளிவுபடுத்திக் குறிப்பு ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் சுப்பிரமணியம் நாகேஸ்வரன் மட்டுமே எமது கட்சி உறுப்பினர்.

மற்றையவரான நாகமுத்து நாகேந்திரன் (ஆனந்தன்) என்பவர் வரதராஜப் பெருமாள் அணியைச் சேர்ந்தவர்.

"இவர் தனது அலுவலகத்திலிருந்து கிரனேட் ஒன்றுடன் தப்பி வந்துள்ளார். போதையில் இரவு 11 மணியளவில் எமது அலுவலகத்துக்கு வந்து கலாட்டா செய்தார். அதனால் பெரும் களேபரம் ஏற்பட்டது. அவரது கையில் இருந்த கிரனேட்டை எமது உறுப்பினர் பாதுகாப்புக் கருதிப் பறித்து, அவரை விரட்டிய சமயம், அங்கு ஏற்பட்ட களேபரத்தை அறிந்து இராணுவத்தினர் அங்கு வந்தனர். அவர்கள் சம்பந்தப்பட்ட நபரையும் எமது உறுப்பினரையும் கைது செய்து கொண்டு சென்று பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். (உ)

## பெரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜீ.ஜீ. பொன்னம்பலத்துக்கும் அன்று ஏற்பட்டது போன்ற அதே ஏமாற்ற உணர்வையே இன்று நாம் பிரிட்டிஷ் அரசிடமிருந்து உணர்கின்றோம்.

இலங்கையில் அமைதியும் சமாதானமும் ஏற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கும் தமிழ் மக்களின் மனதில் புலிகளுக்கு இருக்கும் முக்கியத்துவத்தை யாராலும் மறுக்க முடியாது.

பிரிட்டிஷ் அரசு புலிகளைத் தடை செய்ததன் மூலம் பேச்சு மேசையில் சில பின்னடைவுகள் ஏற்படலாம் என்று நாம் கருதுகிறோம்.

எனினும் கொழும்பிலுள்ள ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் தூதரக உயர் அதிகாரிகளும் புலிகள் மீதான பிரிட்டனின் தடை நோர்வேயின் சமாதான முயற்சிக்கு எந்த வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தாது என்று தெரிவித்துள்ளனர். அதனை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் - என்றுள்ளது. (ம)

சைன் (உடுவில்)
நாளை ஆரம்பம்
(02-03-2001)
கிரயக்கணக்கீடு
வெள்ளி- 3.30 p.m
கணக்கீடு
D.SAM
(84671)

## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யையும் அரச பயங்கரவாதத்தையும் முன்னெடுக்கும் அதன் கொள்கைக்கும் ஊக்கமளிப்பதாக அமையும்." என்று பாலசிங்கம் குறிப்பிட்டார்.

### பௌத்த இனவாதத்துக்கு கிடைத்த பெருவெற்றி

"பிரித்தானியத் தடைச் சட்டத்தில, 'பயங்கரவாதம்' என்ற பதத்துக்கு கொடுக்கப்பட்டிருக்கும் மிகவும் அகன்ற, தெளிவற்ற வரை விலக்கணத்தின் படி, சுதந்திரத்துக்கும் கௌரவத்துக்குமாக நிகழும் நியாயமான அரசியல் போராட்டங்கள் அனைத்துமே பயங்கரவாதமாகக் கருதப்படும் இந்த வரைவிலக்கணத்தின் தாக்கத்துக்கு அமையவே விடுதலைப் புலிகளுக்கும் பயங்கரவாதப் பட்டம் சூட்டப்பட்டிருக்கிறது. தமிழரின் அரசியற் போராட்டத்தின் நீண்ட, சிக்கலான வரலாற்றையோ அன்றி இனக் கொலைப் பரிமாணத்தில் விஸ்வரூபம் பெற்று நிற்கும் சிங்கள அரசுகளின் ஒடுக்குமுறை வரலாற்றையோ அல்லது அடக்கு முறைக்கு எதிராகத் தோற்றம் கொண்ட ஆயுதப் போராட்டத்தின் மகத்துவமான வரலாற்றையோ இந்தத் தடைச் சட்டத்தை இயற்றியவர்கள் அறியவில்லைப் போலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரித்தானியத் தடைச் சட்டமானது பௌத்த இன வாதத்துக்குக் கிட்டிய பெரும் வெற்றியாகும்; அத்தோடு நீதிக்கும் சமாதானத்துக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்." என்று குறிப்பிட்டார் புலிகளின் அரசியல் ஆலோசகர். (உ)

கலைக் கல்லூரி
யாழ்.நகர்
(மனோகராச் சந்தி அருகில்)
கணக்கீடு
A/L 2002
"பங்குடமை"
பிரிவு I சனி, ஞாயிறு 1.15 p.m
ஆரம்பம்: (03-03-2K1)
பிரிவு II திங்கள், செவ்வாய்
4.00 p.m
ஆரம்பம்: (05-03-2K1)
BY: "யாழ்.புகழ்"
கலைச்செல்வன் (84664)

2003 A/L
சைன்
(உடுவில்)
கணக்கு பதிவியல்
கணக்கீடு
D.SAM
ஆரம்பம்
வெள்ளி - 4.15
(84614)

ஆரம்பம்!
A/L 2001
DAY CLASS
"கிரயக்கணக்கீடு"
5/3/2001
மதியம் 12 மணி
கணக்கீடு
D.SAM
(C/15458)
DMI
யாழ் நகர்

# துலா விழுந்து அடியுண்டு சுன்னாகத்தில் மாணவி பலி

யாழ்ப்பாணம்,மார்ச்1

கிணற்றில் தண்ணீர் அள்ளிய வேளை அச்சுடைந்து துலா விழுந்து அடியுண்டு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி ஒருவர் அநியாயமாக உயிரிழந்தார்.

சுன்னாகம் சந்தை வீதியில் நேற்றுப் பகல் இந்தப் பரிதாபச் சம்பவம் இடம்பெற்றது.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த குமாரசாமி கமலினி(வயது -16) என்பவரே மரணமானவர் ஆவார். இவர் ஜி.சீ.ஈ சாதரணதரம் படிக்கும் மாணவி.

இணுவில் மத்திய மகாவித்தியாலயத்தில் பிற்பகலில் இயங்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்குச் செல்வதற்காக நண்பகல் கிணற்றில் குளித்துக் கொண்டிருந்த வேளையிலேயே இச் சம்பவம் இடம்பெற்றது.

இவரது சடலம் பிரேத பரிசோதனைகளுக்காகவும், மேலதிக விசாரணைகளுக்காகவும் யாழ்.போதனா ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டு விசாரணைகளின் முடிவில் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (க-31-15-6-ரி)

## பாலசிங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் நோர்வேத் தலைநகரான ஒஸ்லோவுக்குச் சென்றுவிட்டார் என்றும் -

லண்டன் செய்தி வட்டாரங்களில் பேசப்பட்டது.

தடை குறித்து அவர் வெளியிட்ட கருத்துகள் கூட அங்கிருந்து வழங்கப்பட்டவையே என்றும் கருதப்பட்டது. (உ)

## தடையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிகளில் ஈடுபட்டால் பிரிட்டன் எதிர்காலத்தில் தடையை நீக்குவது குறித்து ஆலோசிக்கும் என்றும் -

பிரிட்டன் உடனடியாக இந்தத் தடைச் சட்டத்தைக் கெடுபிடியாகக் கையாளது என்றும் - நாம் கருதுகின்றோம்.

அதே நேரம் -

இந்தத் தடையை எதிர்த்து மேன்முறையீடு செய்யவும் புலிகள் அமைப்புக்கு வழி இருக்கிறது.

நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் எனின் தடைக்கு மத்தியிலும் புலிகள் தமது சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (உ-ம)

## பரபாகரனையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழு தமிழ்ச் சமூகமும் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் படுகொலை அரசியல் கலாசாரத்தை ஒழித்துக் கட்டுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவரின் செயற்பாடுகளால் மிக மோசமாகப் பாதிக்கப்படுபவர்கள் வடக்கையும் கொழும்பையும் சேர்ந்த தமிழர்களேயாவர். எனவே அவ்வாறான அரசியல் கலாசாரத்தை ஒழிக்கும் பொறுப்பு தமிழ் மக்களையே சார்ந்ததாகும்.

முன்னைய அரசாங்கத்தின் கீழ் தமிழ் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளானார்கள் ஐ.தே.கட்சி அரசாங்கம் ஒரு கட்டத்தில் தமிழ் இளைஞர்களைக் கொல்வதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முடியும் என்று நம்பியது.

இதன் காரணமாகவே இளைஞர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலை ஏற்பட்டது எனினும் உலகில் யுத்தம் மூலம் விடுதலை பெற்ற சமூகம் கிடையாது.

புலிகள் இயக்கம் கடந்த காலங்களில் பிரதான தாக்குதல்களை நடத்தி இனக்கலவரங்களை ஏற்படுத்த முற்பட்டது. அரசு திறமையாக நடந்துகொண்டு அதைத் தடுத்து நிறுத்தியது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டவாதி என்று தன்னைக் கூறிக் கொள்ளும் பிரபாகரன் வடபகுதியில் மக்களின் அன்றாட வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வந்து அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள இடையூறாக இருக்கிறார். மக்கள் இதை நன்கு உணர்ந்து புலிகளின் பிரசார நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டும்.

விரைவில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய சுபீட்ச நிலை நாட்டில் ஏற்படும் - என்று தெரிவித்தார். (ம)

கைகொடுத்தல் நிதி அறிவித்தல்.

96/97 காலப்பகுதியின் பின்னர் காணாமல் போனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு நிதி உதவி செய்ய உள்ளதால் இக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எமது ஒன்றியத்தால் வழங்கப்பட்டுள்ள படிவத்தினை பூர்த்தி செய்து,

தலைவர்
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியம்.
யாழ்.பல்கலைக்கழகம்.

என்ற முகவரிக்கு

அல்லது படிவங்களை பெற்ற இடங்களில் 15-03-2001 க்கு முன் கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கவும்.

படிவம் கிடைக்கும் இடங்கள்:
- லூர்து மடம் (அந்தோனியார் ஆலயம் முன்பாக), கரவெட்டி.
- அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம், யாழ்ப்பாணம்.
- நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியம்

கைகொடுத்தல் நிதி
எம் மண்ணின் அவலங்களை சித்தரிக்கும்
தே.தேவானந்தின்.
உயிர் விசை
(நாடக ஆற்றுகை)
இடம்: ராஜலக்ஷ்மி திரையரங்கு,
நெல்லியடி.
காலம்: 03-03-2001 சனிக்கிழமை.
காலை 10.30,மாலை 2.30 (புதிய நேரம்)
கைகொடுத்தல்:- 50/=, 100/=
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியம்.
LOVELY COOL BAR
LOVELY RECORDING CENTRE
Main street, Nelliyady.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி முத்தையா சவுந்தரம்

நயினாதீவு, 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி முத்தையா சவுந்தரம் நேற்று (28-02-2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராமநாதர் முத்தையாவின் அன்பு மனைவியும் சிவநேசன், நேசமலர், சிவபாலன் (தபாற் கந்தோர், யாழ்ப்பாணம்), வசந்தமலர் (டென்மார்க்), வசந்தராணி (பிரான்ஸ்), சிவறஞ்சன் (கனடா), பகீரதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசலிங்கம், சுலோசனா தேவி, இராஜேந்திரம் (டென்மார்க்), தர்மவாஸ் (பிரான்ஸ்), நகுலேஸ்வரி, மாலினி ஆகியோரின் அன்பு மாமியாரும் விசாகினி, அநோஜன், துர்க்கா, துஷ்யா, விமலன், மயூரன், மாதங்கி, சஞ்சீவன், மதுமிகா சாரங்கன், பானுஜா, பாரதி, கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற கனகம்மா தங்கமுத்து, அம்பலவாணர் (கொழும்பு), கந்தப்பு, நடராஜா, காலஞ்சென்ற முத்தையா மற்றும் செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, வேலுப்பிள்ளை, பரமலிங்கம், தையலம்மை, சிவக்கொழுந்து மற்றும் சோமசுந்தரம், நாகம்மா, சிவயோகம், புவனேஸ்வரி, கிருஷ்ணவதி, பரமானந்தம், கனகசபை, கோபாலபிள்ளை (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-03-2001) வியாழக்கிழமை நயினாதீவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*6ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*

தகவல்:
மு.சிவபாலன், மு.சிவநேசன்
(மகன்மார்)
சோ.இராசலிங்கம் (மருமகன்)

(சி15508)

## சு.க.ஆறுமுகம்

காரைநகர், களபூமி விளானையைச் சேர்ந்த சு.க.ஆறுமுகம் நேற்று (28-02-2001) புதன் அதிகாலை காலமானார்.

அன்னார் பார்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை சிவமணி, நல்லபிள்ளை (கலேவள), திருநாவுக்கரசு (நீர்கொழும்பு), பரமலச்சுமி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), சரஸ்வதி, சுந்தரம்பிள்ளை (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சுந்தரம்மா, பேரம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சச்சிதானந்தம், சிவபாலசுந்தரம் (கலேவள), பாலச்சந்திரன் (யாழ்ப்பாணம்), ராஜேஸ்வரி (ஆசிரியை, விஜயரத்தினம் ம.வி. நீர்கொழும்பு), நாகபூசணி (யாழ்ப்பாணம்), இரத்தினம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-03-2001) வியாழக்கிழமை காலை 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் காரைநகர் தில்லை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*விளானை,*
*காரைநகர்.* (சி15510)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.03.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.